644

இந்தியதேச சரித்திரக்கதைகள்



OFFICE OF THE ... 6-MAY 1939 DELHI MADRAS
636
3720
3794

V.K. அருணாசலம்

பப்ளிஷர்

தெப்பக்குளம். P.O. திருச்சி.

இந்திய தேச

சரித்திரக் கதைகள்

(ஐந்தாம் வகுப்புக்குரியது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - MAY 1939
MADRAS

954

திருச்சிராப்பள்ளி
நேஷனல் காலேஜ் ஹைஸ்கூல்
S. ராமகிருஷ்ண அவதானி M.A, L.T.,
எழுதியது.

V. K. அருணசலம்
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1938 [விலை அணா 6

முகவுரை

குழந்தைகள் கதை கேட்பதில் அதிக விருப்பமுடையவர்கள், எனவே நமது தேச சரித்திரத்தை குழந்தைகளுக்கு கதாரூபமாகப் போதிப்பது அவர்களுக்கு சரித்திர உணர்ச்சி ஏற்படுவதற்கு உரிய சுலபமான வழியாகும்.

தேச சரித்திரக் கதைகளில் பிரதானமானவை, சரித்திரங்களில் இடம் பெறத்தக்க வீரர்கள், பெரியோர்கள், மதாச்சார்யர்கள், வீரமன்னர்கள் முதலியவர்களின் ஜீவிய சரிதைகளாகையால் இச் சரிதைகளின் பெரும் பகுதிகளே சிறுவர்களின் தேச சரித்திர புத்தகத்தில் பெரும்பாலும் இடம் பெறவேண்டும். இதனையொட்டி ஐந்தாம் வகுப்புக்குரிய இந்திய தேச சரித்திரக் கதைகள் சுருக்கமாகவும் தெளிவாகவும் குழந்தைகள் மனதைக் கவற்சிக்கும் வகையிலும் அவர்கள் வாழ்க்கையில் பெரிதும் பயன் படுமாறும் எளிய நடையில் இச் சிறு புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இதில் சரித்திர சம்பந்தமான பல விஷயங்களை விளக்குவதற்கு இன்றியமையாத அநேக படங்களும் தேச படங்களும் இடை யிடையே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதனை கண்ணுறும் பாடசாலை ஆசிரியர்களும் கல்வியிலாகா அதிகாரிகளும் மனமுவந்து ஆதரித்து தங்கள் பாடசாலைகளில் பாடப் புத்தகமாக வைத்து என்னை மென்மேலும் இப்பணியில் ஊக்கமுண்டாகச் செய்யுமாறு வேண்டுகின்றேன்.

திருச்சிராப்பள்ளி
5—11—38

இங்ஙனம்:
S. இராமகிருஷ்ண அவதானி M. A. L. T.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	நமது இந்திய தேசம் ...	1
2.	நம் முன்னோர்கள் ...	3
3.	ராமாயணம் ...	6
4.	மஹாபாரதம் ...	11
5.	கௌதம புத்தரும் மஹாவீரரும் ...	15
6.	மஹா அலெக்ஸாந்தரும் புருஷோத்தமரும்	18
7.	அசோகர் ...	20
8.	சந்திரகுப்த விக்ரமாதித்தியர் ...	22
9.	ஹர்ஷர் ...	24
10.	இயேசுநாதர் ...	26
11.	பூர்வீக தென் இந்திய ராஜ்ஜியங்கள் ...	29
12.	மூன்று ஹிந்து மதாச்சார்யர்கள் ...	35
13.	முகம்மது நபி ...	38
14.	கஜினி முகம்மத் ...	40
15.	பிருதிவி ராஜனும் ராணி சம்யுக்தையும் ...	42
16.	பத்மினி	45
17.	விஜயநகர ராஜ்ஜியம் ...	48
18.	முகலாய அரசர்கள் ...	51
19.	முகலாய வம்சத்திய அரசிகள் ...	55
20.	ஔரங்கசீபும் சிவாஜியும் ...	58
21.	பிற்காலத்திய தென் இந்திய ராஜ்ஜியம் ...	62
22.	ஐரோப்பிய வியாபாரிகள் ...	67
23.	இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் ஆரம்பம்	70

24. கிழக்கு இந்திய கம்பெனியாரின் ஆட்சி .. 74
25. சீக்கியர்கள் ... 78
26. சிப்பாய் கலகமும் விக்டோரியா மஹாராணியும் 79
27. ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தியும் மஹா ஐரோப்பிய யுத்தமும் ... 83
28. நமது இறைவர் .. 85
29. நமது அரசாங்க முறை ... 86
30. நமது தேசத்தின் முன்னேற்றம் ... 88

6 - MAY 1939 MADRAS

இந்திய தேச சரித்திரக் கதைகள்

1. நமது இந்திய தேசம்

நாம் வசிக்கும் இந்நாட்டிற்கு இந்தியா என்று பெயர். முன்னொரு காலத்தில் இந்த நாட்டைப் பரதன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அதனால்தான் நம் நாட்டிற்கு முன் காலத்தில் பரத கண்டம் என்று பெயர் உண்டாயிற்று.

பிள்ளைகளே! பக்கத்தில் இருக்கும் நமது தேசப் படத்தைப் பாருங்கள். நம் தேசத்திற்கு வடக்கு எல்லையாக இருக்கும் இமயமலையைப் பாருங்கள். அந்த மலைத்தொடர்ச்சி அதிக உயரமாக இருப்பதால் அது நம் நாட்டிற்கு ஒரு சுவர்போல இருக்கின்றது. ஆனால் இமயமலையின் இடையில் சில கணவாய்கள் இருக்கின்றன. அவைகளின் வழியாக அன்னியர்கள் நம் நாட்டின் மீது அடிக்கடி படை யெடுத்து வந்திருக்கின்றார்கள். இதைத் தவிர நம் நாட்டின் கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் கடல்கள் இருப்பதைக் கவனியுங்கள். அவைகள் நம் நாட்டைச் சுற்றி அகழிகள் போல இருக்கின்றன. ஆகையால்தான் அன்னியர்கள் சுலபமாக நம் நாட்டின் மீது படை யெடுக்க முடியவில்லை.

இமயமலைக்குத் தெற்கில் ஒரு பெரிய சமவெளி இருப்பதைப் பாருங்கள். அதற்கு இந்துஸ்தான சம

வெளி என்று பெயர். அதன் வழியாக சிந்து கங்கை பிரம்மபுத்திரா நதிகள் பாய்கின்றன. இந்தச் சமவெளி



அதிக செழிப்பான பிரதேசம். ஆகையால்தான் அன்னியர்கள் நம் நாட்டின் மீது அடிக்கடி படை யெடுத்து வந்திருக்கின்றார்கள்.

இந்துஸ்தான சமவெளிக்குத் தெற்கில் விந்திய மலை இருப்பதைப் பாருங்கள். இம்மலைக்குத் தெற்கில் உள்ள பிரதேசத்திற்குத் தக்காணம் என்று பெயர்; அல்லது தக்ஷிணம் என்று பெயர். இது ஒரு பீடபூமிப் பிர

தேசம். இந்தப் பீடபூமிக்கு எல்லைகளாக கிழக்குத் தொடர்ச்சி மலையும் மேற்குத் தொடர்ச்சி மலையும் இருக்கின்றன. தக்காணப் பீடபூமியின் வழியாகக் கோதாவரி கிருஷ்ணு காவேரி நதிகள் பாய்வதைப் பாருங்கள். தக்காண பீட பூமிக்குக் கிழக்கில் கர்னுடகம் என்ற சமவெளியும், மேற்கில் கொங்கணம் என்ற மற்றொரு சமவெளியும் உண்டு. இச் சமவெளிகள் அதிக செழுமையான பிரதேசங்கள்.

பிள்ளைகளே! நம் நாடு அதிக செழிப்பான நாடாகையால் அன்னியர்கள் நம் நாட்டின் மீது அடிக்கடி படையெடுத்து வந்திருக்கின்றார்கள். அந்த விவரங்களைப் பற்றி நாம் பிறகு கவனிப்போம்.

வினக்கள்.

1. இந்தியாவின் எல்லைகளைக் கூறுக ?

2. அன்னியர்கள் நம் நாட்டின்மீது சுலபமாக படையெடுக்க முடியாததற்கு காரணம் என்ன?

3. தக்காணம் என்று எதற்கு பெயர், இதன் எல்லைகளையும் இதன் வழியாகப் பாயும் நதிகளின் பெயரையும் கூறுக ?

4. நம் நாட்டை பரத கண்டமென வழங்குவதேன் ?

---

2. நம் முன்னோர்கள்

பிள்ளைகளே! முன் காலத்தில் நம் நாட்டில் நாகரீகமில்லாத ஜனங்கள் வசித்து வந்தார்கள். அவர்களைப பற்றி நமக்கு அதிகமாகத் தெரியவில்லை. அவர்களுடைய சந்ததியார்கள் இப்பொழுதும் காடுகளிலும் மலைகளிலும் வசித்து வருகிறார்கள்.

அவர்களுக்குப் பிறகு திராவிடர் என்ற ஜனங்கள் நம் நாட்டில் வசித்து வந்தார்கள். அவர்கள் நாகரீக முடையவர்கள். திராவிடர்கள் பெரும்பாலாக தென் இந்தியாவில்தான் வசித்து வந்தார்கள். அங்கே அவர்களுடைய சந்ததியார்கள் இப்பொழுதும் இருக்கிறார்கள். அவர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளம் முதலிய பாஷைகளைப் பேசுகிறார்கள். திராவிடர்கள் நாளடைவில் தென்னிந்தியாவில் சேர சோழ பாண்டிய ராஜ்ஜியங்களை ஸ்தாபித்தார்கள்.

பூர்வீக மலை ஜனங்கள்

திராவிடர்களுக்குப் பிறகு ஆரியர்கள் என்ற நாகரீக முள்ள ஜனங்கள் இந்தியாவிற்கு வந்தார்கள். அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தார்கள். அவர்கள் அதிகமாக வடக்கு இந்தியாவில் தான் குடியேறினார்கள். ஆரியர்கள் வந்த பிரதேசத்திற்கு ஆரிய வர்த்தம் என்று பெயர்.

ஆரியர்கள் அதிக நாகரீக முடையவர்கள். அவர்கள் நிலங்களைச் சாகுபடி செய்து வந்தார்கள். அவர்களுக்கு அதிக தெய்வ பக்தி உண்டு. அவர்களுடைய

மத சாஸ்திரங்களுக்கு வேதங்கள் என்று பெயர். ஆரியர்கள் வடக்கு இந்தியாவில் பல ராஜ்ஜியங்களை ஸ்தா



பித்தார்கள். அவைகளில் பாஞ்சால, கோசல, கௌரவ, விதேக ராஜ்ஜியங்கள் முக்கியமானவை.

வினக்கள்.

1. திராவிடர்கள் தென்னிந்தியாவில் ஸ்தாபித்த ராஜ்ஜியங்கள் எவை?

2. ஆரியர்கள் எங்கிருந்து இந்தியாவிற்கு வந்தார்கள், எப்பாகத்தில் அதிகமாக குடியேறினர்கள்?

3. ஆரியர்கள் வட இந்தியாவில் ஸ்தாபித்த ராஜ்ஜியங்களின் பெயரைக் கூறுக?

3. ராமாயணம்

பிள்ளைகளே! நீங்கள் அடிக்கடி ராமாயணம் என்ற கதையைப் பற்றி கேட்டிருப்பீர்கள். அது ராமர் என்ற ஒரு உத்தமரைப்பற்றிய கதை. இந்துக்கள் அவரைத் தெய்வத் தன்மை வாய்ந்தவர் என்று கருதுகிறார்கள்.

முன் காலத்தில் வட இந்தியாவில் கோசலம் என்ற ஒரு கீர்த்தி வாய்ந்த ராஜ்ஜியம் இருந்தது. அதற்கு அயோத்தி தலை நகரமாக இருந்தது. அயோத்தியில் தசரதர் என்ற கீர்த்திவாய்ந்த அரசர் ஆண்டு வந்தார். அவருக்குச் கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூன்று மனைவிமார்கள் இருந்தார்கள். அவர்களுக்கு வெகு காலம் வரையில் பிள்ளைகள் இல்லை. ஆகையால் தசரதர் புத்திரகாமேஷ்டி என்ற யாகத்தைச் செய்தார். அதன்பிறகு அவருக்கு ராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்கனன் என்ற நான்கு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவரான ராமர் குணத்திலும் தைரியத்திலும் முதன்மை பெற்றவர். தசரதருடைய புத்திரர்கள் வசிஷ்டர் என்ற முனிவரிடம் சாஸ்திரம் முதலியவைகளைக் கற்றுக்கொண்டார்கள்.

அக்காலத்தில் விதேக என்ற மற்றொரு ராஜ்ஜியம் இருந்தது. அதற்கு மிதிலை தலைநகரமாக இருந்தது. விதேக ராஜ்ஜியத்தை ஜனகர் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருக்கு அதிக அழகும் உத்தம குணமும் வாய்ந்த சீதை என்ற பெயருடைய ஒரு பெண் இருந்

தாள். சீதையைப் பல அரசர்கள் மணக்க விரும்பி ஞர்கள்.

ஜனகரிடத்தில் அதிக கனமுடைய வில் ஒன்று இருந்தது. ஜனகர் அந்த வில்லை வளைக்கும் அரசகுமாரனுக்குத்தான் தன்பெண் சீதையை மணம் செய்து கொடுப்பதாகச் சொன்னார். மிதிலை நகரத்திற்கு ராமர் சென்று வில்லை வளைத்து சீதையை மணந்தார். அதே சமயத்தில் மற்ற மூன்று சகோதரர்களுக்கும் கலியாணம் நடந்தது. பிறகு தங்கள் மனைவிகளுடன் அரசகுமாரர்கள் அயோத்திக்குச் சென்றார்கள்.

சில வருஷங்களுக்குப் பிறகு தசரதர் ராமனுக்குப் பட்டம் கட்டவேண்டுமென்று உத்தேசித்தார். மகுடாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார். ஆனால் தசரதரின் இளைய மனைவியான கைகேயி தன் மகன் பரதனுக்கே பட்டம் கட்ட வேண்டுமென்று தசரதரைக் கேட்டுக் கொண்டாள். முன் ஒரு சமயம் தசரதர் அவளுக்கு இரண்டு வரங்களைக் கொடுப்பதாக உறுதிமொழி கூறி இருந்தார். அந்த வரங்களைக் கைகேயி இப்பொழுது வேண்டு மென்று கேட்டாள். அதில் ஒரு வரம் இராமன் 14 வருஷங்கள் காட்டில் வாசம் செய்ய வேண்டும் என்பது. மற்றொன்று தன் மகன் பரதன் அரசன் ஆகவேண்டுமென்பது. தசரதர் தான் கொடுத்த வரங்களை மறுக்க முடியாமல் தவித்தார். ஆனால் இராமர் தந்தை சொல்லைக் காப்பாற்றுவதற்காக தன் மனைவி சீதை தன் இளைய சகோதரன் லட்சுமணன்



ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

முதலியவர்களுடன் சந்தோஷமாகக் காட்டிற்குச் சென்றார். இவ்வாறு நடந்ததைக் கேட்ட தசரதர் அதிக துக்கமடைந்து உயிர் துறந்தார்.

தனது மாமன் வீட்டிற்குச் சென்ற பரதன் அயோத்திக்குத் திரும்பி வந்து தன் தாயின் கொடிய செய்கையைக் கேட்டு மிகவும் வருத்தமடைந்தான். தனக்கு ராஜ்ஜியம் வேண்டாமென்று இராமரை அயோத்திக்கு மறுபடியும் அழைத்து வருவதற்காகப் பரதன் தேடிச் சென்றான். இராமரைச் சித்திரகூட பர்வதத்தின் அருகில் கண்டான். பரதன் அதிகமாக மன்றாடிக் கேட்டுக்கொண்டான். இராமர் ராஜ்ஜியத்திற்கு திரும்பி வர சம்மதிக்கவில்லை. ஆகையால் பரதன் ராமருடைய பாதுகைகளைப் பெற்று அவைகளுக்கு பட்டாபிஷேகம் செய்வித்து இராமருக்குப் பதிலாக ராஜ்ஜிய பரிபாலனம் செய்து வந்தான். பிள்ளைகளே! பரதன் தன் தம்யனிடத்தில் கொண்டிருந்த அன்பையும் மரியாதையையும் பாருங்கள்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு ராம லட்சுமணர்கள் சீதையுடன் தண்டகாருண்யம் என்ற காட்டிற்கு வந்து அங்கே சிலகாலம் வசித்துவந்தார்கள். அவ்விடத்தில் அவர்களுக்கு ஒரு பெரும் கஷ்டம் ஏற்பட்டது. ஒரு நாள் இராமரும் லட்சுமணரும் வேட்டையாடச் சென்றனர். அந்தச் சமயத்தில் இலங்கை நாட்டின் அரசனான ராவணன் என்ற ராக்ஷஸ அரசன் ஒரு சந்நியாசியைப்போல மாறு வேடம் பூண்டு சீதையை வஞ்சகமாக அவ்விடமிருந்து தூக்கிக் கொண்டுபோய் விட்டான். இராவணன் சீதையை அசோக வனம் என்ற ஒரு தோட்டத்தில் மறைத்து வைத்திருந்தான்.

வேட்டையாடச் சென்ற இராமர் திரும்பி வந்து சீதையைக் காணுமல் அதிக மன வருத்தமடைந்தார். இராமர்லட்சுமணர்கள் சீதையைத்தேடிக் கண்டுபிடிக்க தெற்கு திசையை நோக்கிச் சென்ருர்கள். காடெங்கும் தேடி அலைந்த பிறகு சுக்ரீவன் என்ற ஒரு வானர அரசனைப் பார்த்து அவனுடன் சிநேகம் செய்து கொண்டார்கள். பிறகு சுக்ரீவனுடைய சேனைத் தலைவனுகிய ஹனுமார் என்பவன் வானரசேனைகளுடன் சீதையைத் தேடி கண்டு பிடிக்கச் சென்ருன். அவன் அதிக பராக்கிரமமுடையவன். ஹனுமார் சீதையைப் பலஇடங்களில் தேடிக் காணுது பிறகு கடலைத் தாண்டி இலங்கைத் தீவிற்குச் சென்ருன். அங்கு சீதை அசோக வனத்திலிருப்பதைப் பார்த்தான். உடனே ஹனுமார் இராமரிடம் திரும்பிவந்து இந்த சங்கதியைத் தெரிவித்தான்.

இராமர் ஒரு பெரும் சேனையுடன் இலங்கைக்கு படையெடுத்துச் சென்ருர். அங்கு இராமருக்கும் இராவணனுக்கும் ஒரு கோரமான சண்டை நடந்தது. இராவணன் சண்டையில் தோற்கடிக்கப்பட்டு உயிர் துறந்தான். சண்டையில் ஜெயித்த இராமர் சீதையை ராக்ஷஸர் வசமிருந்து மீட்டார்.

இதற்குள் இராமர் காட்டிற்கு வந்து பதிநான்கு வருஷங்கள் ஆகிவிட்டன. இராமர் சீதையைக் கூட்டிக் கொண்டு அயோத்திக்குச் சென்ருர். அங்கு இராமருக்குப் பட்டாபிஷேகம் அதிக விமரிசையாக நடைபெற்றது. இராமர் அயோத்தியை பலவருஷங்கள் வரையில் அதிக சிறப்பாக ஆண்டுவந்தார்.

பிள்ளைகளே! இராமர், லட்சுமணர், சீதை, ஹனுமார் முதலியவர்களுடைய அரிய பெரிய குணதிசியங்களைப் பாருங்கள். அவர்களுடைய நற்செய்கைகளை நாம் பின் பற்றி நடக்க வேண்டும். அவர்கள் தெய்வத் தன்மை வாய்ந்தவர்கள் என்று நாம் கருதுகிறோம்.

விஞக்கள்.

1. அயோத்தியின் அரசரின் பெயர், அவருக்கு எத்தனை மனைவிகள், அவர் குழந்தைகளின் பெயர் என்ன ?

2. ராமர் பட்டத்துக்கு வரமுடியாது போனதின் காரணம் கூறுக ?

3. ராமர் யாரை எவ்விதம் மணந்து கொண்டார் ?

4. ராமர் காட்டிலிருக்கிறபோது அவருக்கு ஏற்பட்ட விபத்து என்ன ?

5. பரதன் தனது அன்பை ராமருக்கு எவ்விதம் காட்டினான்?

6. ராமர் சீதையை யாருடைய உதவியைக் கொண்டு எவ்விதம் இராவணனிடமிருந்து மீட்டார் ?

---

4. மஹாபாரதம்

பிள்ளைகளே! மஹாபாரதமும் ராமாயணத்தைப் போன்ற ஒரு பெரிய நூல். அது பரதவம்சத்தைச் சேர்ந்த பாண்டவர்கள் கௌரவர்கள் முதலியவர்களைப்பற்றிய கதைகள் அடங்கியது. இந்த மஹாபாரதம் என்ற நூல் வியாசர் என்ற பெயருடைய ஒரு மஹானால் எழுதப்பட்டது.

முன் காலத்தில் வட இந்தியாவில் கோசலம் என்ற ஒரு முக்கியமான ராஜ்ஜியம் இருந்தது. அதற்கு ஹஸ்தினபுரம் என்ற் நகரம் தலை நகரமாக இருந்தது. அந்த

ந்கரம் இப்பொழுது நமக்குத் தலைநகரமாக இருக்கும் டில்லிக்கு அருகில் இருந்தது. கோசல ராஜ்ஜியத்திற்கு திருதராஷ்டிரன் என்பவன் அரசனாக இருந்தான். அவன் குருடனாகையால் அவனுக்குப் பதிலாக் அவன் தம்பி பாண்டு என்பவன் ராஜ்ஜியத்தை ஆண்டு வந் தான்.

திருதராஷ்டிரனுக்கு நூறு பிள்ளைகள் இருந்தார் கள். அவர்களில் துரியோதனன் என்பவன் மூத்தவன். பாண்டுவிற்கு ஐந்து பிள்ளைகள் இருந்தார்கள். அவர் களுக்குப் பஞ்சபாண்டவர்கள் என்று பெயர். அவர் களில் தர்மபுத்திரர் மூத்தவர். பாண்டவர்கள் நல்ல குணமுடையவர்கள். அவர்களிடத்தில் கௌரவர்கள் பொறாமை கொண்டார்கள். அவர்களைக் கொல்லவும் ஏற்பாடு செய்தார்கள் ஆகையால் பாண்டவர்கள் பாஞ் சால நாட்டிற்குச் சென்றார்கள்.

அப்பொழுதுபாஞ்சால நாட்டைத் துருபதன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குத் துரௌபதி என்ற ஒரு அழகுவாய்ந்த பெண் இருந்தாள். பாண்ட வர்கள் பாஞ்சால நாட்டிற்குச் சென்ற சமயத்தில் துரௌ பதிக்குச் சுயம் வரம் நடந்தது. தர்மபுத்தரனின் சகோ தரனான அர்ச்சுனன் வில் வித்தையில் அதிகப் பயிற்சி பெற்றிருந்தான். அவன் துரௌபதியை தனக்கு மனை வியாகப் பெற்றான். பிறகு பாண்டவர்கள் ஐவரும் தங் கள் தாயின் உத்தரவின்படி துரௌபதியை மணந்தார் கள். அதன் பிறகு அவர்கள் ஹஸ்தினபுரத்திற்கு

திரும்பிச் சென்றுர்கள். அங்குத் திருதராஷ்டிரன் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் சமாதானம் செய்தான். அதன்படி பாண்டவர்களுக்கு இந்திரப் பிரஸ்தத்தைச் சுற்றி உள்ள நாடு கொடுக்கப்பட்டது. பாண்டவர்களுடைய நாடு நாளடைவில் செழித்து ஓங்கிற்று. ஆகையால் துரியோதனன் மறுபடியும் பொருமை கொண்டான். அவன் தன்னுடைய மாமன் சகுனி என்பவனுடைய தூண்டுதலால் பாண்டவர்களைச் சூதாட்டத்திற்கு அழைத்தான். ஏனென்றுல் சகுனி மாமா சூதாட்டத்தில் அதிக தேர்ச்சி பெற்றவன். சூதாட்டத்தில் தோல்வியடைந்த பாண்டவர்கள் தங்கள் ராஜ்ஜியம் எல்லாவற்றையும் இழந்தார்கள். இது மட்டுமல்லாமல் துரியோதனுடைய தம்பியான துச்சாசனன் துரௌபதியைச் சபையில் அவமானம் செய்ய எண்ணினுன். ஆனுல் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவளுக்கு உதவி புரிந்து அவளுடைய கௌரவத்தைக் காப்பாற்றினுர்.

பிறகு பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் மற்ருெரு சமாதானம் ஏற்பட்டது. அதன்படி பாண்டவர்கள் 12 வருடங்கள் வனவாசம் செய்யவேண்டி இருந்தது. அதன் பிறகு அவர்கள் ஒரு வருடம் வரையில் ஒருவருக்கும் தெரியாதபடி அக்ஞாதவாசம் செய்யவேண்டும். அப்படியே பாண்டவர்கள் 12 வருடங்கள் வரையில் காட்டில் வசித்தனர். பிறகு ஒரு வருடம் விராட தேசத்தில் மறைந்து வாழ்ந்து வந்தனர். இவ்வாருக 13 வருடங்கள் ஆனபிறகு பாண்டவர்கள் ஒரு தூதனை

அனுப்பித் தங்கள் ராஜ்ஜியத்தைத் திருப்பிக் கொடுக்கும் படி துர்யோதனனைக் கேட்டார்கள். துரியோதனன் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டான். ஆகையால் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் ஒரு பெரிய போர் நடந்தது. அந்தப் போர் குருக்ஷேத்திரம் என்ற இடத்தில் 18 நாள்கள் வரையில் நடந்தது. இந்தச் சண்டையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாண்டவர்களுக்கு உதவி புரிந்தார். போரில் பாண்டவர்கள் வெற்றி பெற்றார்கள். கௌரவர்கள் தோல்வியடைந்து உயிர் துறந்தார்கள். பிறகு தர்மபுத்திரர் கோசல நாட்டிற்கு அதிபதியானார்.

பிள்ளைகளே! இந்த வரலாற்றைப்பற்றி எழுதப் பட்ட நூலுக்குத்தான் மஹாபாரதம் என்று பெயர். பஞ்சபாண்டவர்களின் பெருந் தன்மையையும் நல்லொழுக்கத்தையும் பாருங்கள். கௌரவர்களைப்போன்ற துஷ்டபுத்தி உடையவர்கள் எப்பொழுதும் அழிவையே அடைவார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

வினாக்கள்.

1. கோசல ராஜ்ஜியம் எங்கிருக்கிறது, இதனை ஆண்டு வந்த அரசர் பெயர், அவருக்கு எத்தனை குழந்தைகள், மூத்தவன் பெயர் என்ன ?

2. மஹாபாரதம் யாரால் எழுதப்பட்டது ?

3. பாண்டுவிற்கு எத்தனை பிள்ளைகள், அவர்களின் பெயர் என்ன ?

4. அர்ச்சுனன் யாரை எவ்விதம் மணந்தான் ?

5. பாண்டவர்கள் தங்களது ராஜ்ஜியத்தை எப்படி இழக்க நேரிட்டது, பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் எந்த இடத்தில் எத்தனை நாட்கள் போர் நடந்தது, இப்போரில் வெற்றி பெற்றவர்கள் யார் ?

5. கௌதம புத்தரும் மஹாவீரரும்

கௌதம புத்தர்:—சுமார் 2400 வருஷங்களுக்கு முன் இமயமலை அடிவாரத்தில் உத்தர கோசலம் என்ற ஒரு சிறிய ராஜ்ஜியம் இருந்தது. அதைச் சுத்தோதனர் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவருக்குச் சித்தார்த்தன் என்ற ஒரு பிள்ளை பிறந்தார். சித்தார்த்தருக்கு கௌதமர் என்ற மற்றொரு பெயர் உண்டு. கௌதமர் அதிகசெல்வமாய் வளர்ந்து வந்தார். சகல சாஸ்திரங்களையும் கற்றார். இருபதாவது வயதில் யசோதை என்ற ஒரு அழகிய பெண்ணை மணந்தார். கௌதமர் அரண்மனையில் சகல சுகங்களையும் அனுபவித்த போதிலும், உலக வாழ்க்கையை வெறுக்க ஆரம்பித்தார். உலகத்தில் பிராணிகள் படும் துன்பங்களைக் கண்டு அதிக மனவருத்த மடைந்தார்.

கௌதம புத்தர்

ஒரு நாள் அரண்மனையை விட்டு வெளியேவந்து உலாவச் சென்றார். தற்செயலாய்ப் பிச்சைக்காரன் ஒருவனையும் வியாதியால் பீடிக்கப்பட்ட மற்றொருவனையும் இன்னும் பலவிதமாக கஷ்டப்படும் ஜனங்களையும் பார்த்தார். வேறொரு சமயத்தில் ஒரு பிரேதத்தை தூக்கிக்

கொண்டு போவதையும் பார்த்தார். உலகத்தில் இப்படிப் பட்ட துன்பங்கள் இருப்பதைப் பார்த்த கௌதமர் உலக வாழ்கையை வெறுத்து அக்கஷ்டங்களை ஒழிக்க ஒரு வழியை கண்டு பிடிக்க வேண்டுமென்று தீர்மானித் தார்.

ஆகையால் ஒரு நாள் நடு இரவில் தன் மனைவி தூங்கும் பொழுது அரண்மனையை விட்டுக் கிளம்பி காட்டிற்குச் சென்றார். பிறகு 6 வருடங்கள் வரையில் காட்டில் கடுந்தவம் செய்தார். பிறகு ஒரு நாள் கயா என்ற இடத்திற்கு அருகில் உள்ள ஒரு ஆலமரத்தின் கீழ் உட்கார்ந்து ஆழ்ந்து ஆலோசனை செய்யும் பொழுது அவருக்கு ஞான உதயம் ஆயிற்று. அதன் பிறகு தான் அவர் புத்தர் என்று அழைக்கப்பட்டார். உலக வாழ்க்கையின் துன்பங்களை ஒழிக்க ஒரு சிறந்த வழி ஒன்றைக் கண்டு பிடித்ததும் காட்டை விட்டு புறப் பட்டார். ஊர் ஊராகச் சென்று புத்தர் எல்லா ஜனங் களுக்கும் தான் கண்டு பிடித்த புதிய ஞான மார்க்கத் தைக் கற்பிக்கத் தொடங்கினார். புத்தரால் கண்டுபிடிக்கப் பட்ட இப்புதிய மதத்திற்குப் பௌத்த மதம் என்று பெயர். இம்மதம் இந்தியாவில் சீக்கிரம் பரவியது. நம் தேசத்தில் இந்த மதம் சில காலத்திற்குப் பிறகு க்ஷீணதசையை அடைந்தது. ஆனால் இந்த மதம் இலங்கை, பர்மா, சைனா, ஜப்பான் முதலிய தேசங் களில் பரவிவிட்டது. புத்தர் 80-ம் வயதில் உயிர் துறந்

தார். பௌத்த மதத்தில் நல்லொழுக்கம் வேண்டுமென்பது முக்கியமான கொள்கை. பிராணிகளிடத்திலும் ஜனங்களிடத்திலும் அன்பு காட்ட வேண்டியது மற்ருெரு முக்கியமான கொள்கை. ஜாதி மத பேதங்கள் புத்த மதத்தில் கிடையாது. எல்லா ஜனங்களையும் சமமாகப் பாவிக்க வேண்டுமென்று புத்தர் போதித்தார்.

பிள்ளைகளே! கௌதம புத்தர் ஜனங்களை நல் வழியில் திருப்ப முயன்ருர். நாமும் அவருடைய வாழ்க்கையிலுள்ள நல்ல கொள்கைகளைப் பின்பற்றி நடந்து அவரைப்போல் நாம் பிறருடைய நன்மையைக்கோர வேண்டும்.

மஹாவீரர்

கௌதம புத்தர் வசித்த காலத்திலேயே வைசாலி என்ற சிறிய ராஜ்ஜியத்தில் ஒரு க்ஷத்திரிய குடும்பத்தில் வர்த்தமானர் என்பவர் பிறந்தார். பிறகு இவருக்கு மஹாவீரர் என்ற பெயர் வந்தது. அவர் உலக வாழ்க்கையை விட்டு ஒரு துறவி யிடம் உபதேசம் பெற்றுத் தானும் ஒரு துறவியாஞர். இவர் ஞானம் பெற்றதும் ஜீனர் என்ற பட்டத்தைப் பெற்ருர். ஆகையால் இவர் போதித்த மதத்திற்கு ஜைன மதம் அல்லது சமண மதம் என்று பெயர் வந்தது. சமண மதம் ஏறக்குறைய பௌத்த மதக் கொள்கைகளையே பின்பற்றியது. இந்த மதத்தில் ஜனங்கள் பிறரிடத்தில் அன்பு காட்ட வேண்டுமென்பது முக்கியமான கொள்கை. மஹாவீரர்

முக்கியமாக அஹிம்ஸை அல்லது பிறருக்குத் துன்பம் விளைக்காமல் இருப்பது என்ற கொள்கையை போதித்தார். சமணமதத்தைச் சேர்ந்தவர்கள் வட இந்தியாவில் இப்பொழுதும் இருக்கிறார்கள்.

வினாக்கள்.

1. கௌதமர் எந்த இடத்தில், எக்குடும்பத்தில், எப்போது பிறந்தார் ?

2. கௌதமர் உலக வாழ்க்கையை வெறுத்து அரண்மனையை விட்டு காட்டுக்குச் செல்ல காரணம் கூறுக ?

3. கௌதமருக்கு புத்தர் என்ற பெயர் எப்போது வழங்கலாயிற்று, அவர் கண்டு பிடிக்கப்பட்ட மதத்திற்கு பெயர் என்ன; இம்மதம் எங்கெந்த இடங்களில் பரவி யிருக்கிறது, இம்மதத்தின் முக்கியமான கொள்கை யாது ?

4. சமண மதம் எவரால் ஏற்பட்டது, இதற்கு மற்றொரு பெயர் என்ன ?

---

6. மஹா அலெக்சாந்தரும் புருஷோத்தமரும்

ஆரியர்களுக்குப் பிறகு அயல் நாட்டிலிருந்து அலெக்சாந்தர் என்ற பெயருடைய ஒரு கியாதி பெற்ற யுத்தவீரர் நம் நாட்டின் மீது படையெடுத்து வந்தார். அவர் ஐரோப்பா கண்டத்திலுள்ள கிரீஸ் தேசத்தைச் சேர்ந்த மாசிடோனியா என்ற ராஜ்ஜியத்தின் அரசர். அவர் அதிக பராக்கிரமம் வாய்ந்த ஒரு பெரிய யுத்த வீரர். உலகத்தையே ஜெயித்து ஆள வேண்டுமென்ற எண்ணம் அவருக்குத் தோன்றிற்று. அவர் பாரசீகம்

ஆப்கானிஸ்தானம் முதலிய ராஜ்ஜியங்களை ஜெயித்து விட்டுஇமயமலேயின் வடமேற்குப் பக்கத்திலுள்ள கைபர் கணவாயின்வழியாக இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்.

மஹா அலெக்சாந்தர்

அப்பொழுது பாஞ்சால நாட்டில் புருஷோத்தமன் அல்லது போரஸ் என்ற பெயருடைய அரசன் ஆண்டுவந்தான். புருஷோத்தமன் அலெக்சாந்தரின் வரவைக் கேட்டு அவனை ஒரு பெரும் சேனையுடன் எதிர்த்தான். ஜீலம் நதிக் கரையில் புருஷோத்தமனுக்கும் அலெக்சாந்தருக்கும் ஒரு பெரிய போர் நடந்தது. சண்டையில் அலெக்சாந்தர் ஜெயம் பெற்ருர். ஆயினும் புருஷோத்தமரின் தைரியத்தை மெச்சி அலெக்சாந்தர் அவனுக்கு ஜெயிக்கப்பட்ட ராஜ்ஜியத்தை திருப்பிக் கொடுத்து விட்டான்.

இவ்வாருக அலெக்சாந்தர் பல ராஜ்ஜியங்களை ஜெயித்த பிறகு தன் நாட்டிற்குத் திரும்பிப் போகும் வழியில் பாபிலன் என்ற ஊரில் 33 வது வயதில் உயிர் துறந்தார். அநேகப் போர்களில் வெற்றி பெற்றுப் பல ராஜ்யங்களை ஜெயித்ததால் அவர் மஹா அலெக்சாந்தர் என்ற பெயரை அடைந்தார்.

வினுக்கள்.

1. ஆரியர்களுக்குப் பிறகு நம் நாட்டின் மீது படையெடுத்த அரசரின் பெயரையும், அவர் எங்கிருந்து வந்தார் என்பதையும் கூறுக ?

2. அவர் யாருடன் யுத்தம் செய்ய நேர்ந்தது அதன் முடிவு என்ன ?

---

7. அசோகர்

புத்தர் வசித்த காலத்திலேயே வட இந்தியாவில் மகத ராஜ்ஜியம் என்ற ஒரு ராஜ்ஜியம் இருந்தது. அந்த ராஜ்ஜியத்தை மௌரிய வமிசத்தரசர்கள் ஆண்டு வந்தார்கள். மௌரிய வம்சத்தில் சந்திரகுப்த மௌரியர் என்ற அரசர் அதிக கீர்த்தி வாய்ந்தவர். அவருக்குப் பிறகு அவருடைய பேரரான அசோகர் மகத ராஜ்ஜியத்தின் அரசரானுர்.

அசோகர் ராஜரிஷி

அசோகர் நல்ல குணமும் பெரிய நோக்கமும் உடையவர். அவர் ஒரு பெரிய போர் வீரர். அவர் மகத ராஜ்ஜியத்தின் தென் கிழக்கிலுள்ள கலிங்க நாட்டை ஜெயிக்க உத்தேசித்தார். ஒரு பெரிய சேனையுடன் கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்ருர். அப்போரில் அசோகர் வெற்றி அடைந்த போதிலும் போரில் பல ஆயிரக் கணக்கான ஜனங்கள் இறந்ததைக்

கண்டு அதிக மன வருத்த மடைந்தார். போர்க்களத்தில் இனி தான் சண்டையே செய்வதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டார். அதன்படியே கலிங்கப் போருக்குப் பிறகு அசோகர் வேறு மற்ற போர்களுக்கே செல்லவில்லை. கலிங்கப் போருக்குப் பிறகு அசோகர் மத விஷயங்களில் அதிகமாக ஈடுபட்டார். பௌத்த மதத்தில் அதிக பற்று உள்ளவரானார். ஜீவஹிம்சையை முற்றிலும் விட்டு விட்டார். தம் ராஜ்ஜியத்தில் ஜனங்கள் மிருகங்களைக் கொல்லக் கூடாதென்று உத்தரவிட்டார். தன்னுடைய ஜனங்கள் பௌத்த மதத்தைத் தழுவும்படி செய்தார். அன்னிய நாடுகளுக்குக்கூட மத போதர்களை அனுப்பினார். அதனால் பௌத்த மதம் இலங்கை, பர்மா, சைனா முதலிய நாடுகளில் அதிகமாகப் பரவிற்று. பௌத்த மதக் கொள்கைகளைக் கற்பாறைகளிலும் கல் தூண்களிலும் செதுக்கி வைத்தார். அவரால் கட்டப்பட்ட ஸ்தூபிகளை நாம் இப்பொழுதும்கூட பல இடங்களில் பார்க்கலாம்.

அசோகர் அதிக திறமை வாய்ந்த அரசர். ஜனங்களை நீதிநெறி தவறாதபடி ஆண்டுவந்தார். அவர்களுக்குப் பலவித சௌகர்யங்களைச் செய்தார். பல இடங்களில் சாலைகளைப் போட்டார். சாலைகளின் இரு பக்கங்களிலும் மரங்களையும் வைத்துப் பயிராக்கினார். வழிப்போக்கர்களின் சௌகர்யங்களை உத்தேசித்துப் பல கிணறுகளையும் சத்திரங்களையும் கட்டினார். இதைத் தவிர பல தர்ம வைத்தியசாலைகளையும் ஏற்படுத்தினார்.

மிருகங்களுக்குக்கூட பலவித சௌகர்யங்களைச் செய்தார்.

அசோகர் இவ்வாருகத் தன் ராஜ்ஜியத்தை அதிக சிறப்புடன் 40 வருஷகாலம் வரையில் ஆண்டு வந்தார். சிலகாலம் துறவியாக இருந்த பிறகு தன்னுடைய 80-வது வயதில் உயிர் துறந்தார்.

பிள்ளைகளே! அசோகர் தன் குடிகளை அதிக பக்ஷமாக ஆண்டுவந்ததால் அவருடைய பெயரை ஜனங்கள் என்றைக்கும் மறக்காமல் இருக்கிருர்கள். அவர் இந்தியாவில் ஆண்ட அரசர்களுக்குள் அதிகக் கீர்த்தி வாய்ந்தவர் என்பதை நாம் மறக்கக் கூடாது.

வினுக்கள்.

1. அசோகர் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர், அவர் ராஜ்ஜியத்தின் பெயர் என்ன ?

2. அசோகர் எந்த நாட்டின் மீதுபடை யெடுத்தார், போருக்குப் பிறகு அவர் என்ன முடிவு செய்து கொண்டார், அவர் எந்த மதத்தில் பற்றுள்ளவராஞர், இம்மதத்தைப் பறவச் செய்ய என்ன செய்தார், அது எங்கெங்கு பரவிற்று ?

3. அசோகர் காலத்தில் ஜனங்களுக்குச் செய்த நன்மைகளை கூறுக ?

8. சந்திரகுப்த விக்ரமாதித்தியர்

அசோகர் இறந்த பிறகு குப்த வமிசத்தைச் சேர்ந்த அரசர்கள் வட இந்தியாவில் ஆண்டுவந்தார்கள். குப்த வமிசத்தைச் சேர்ந்த அரசர்களில் சந்திரகுப்த விக்கிரமாதித்யர் அதிக கீர்த்தி வாய்ந்தவர். அவர்

கி. பி. நான்காவது நூற்றுண்டில் அரசுபுரிந்து வந்தார். அவர் ஒரு பெரிய போர்வீரர். ஆகையால் அவருக்கு விக்கிரமாதித்யர் என்ற பட்டம் வந்தது. அவர் பல அரசர்களை ஜெயித்துக் குப்த ராஜ்யத்தை அதிகப்படுத்தினர்.

சந்திரகுப்த விக்ரமாதித்யர் ராஜ்ஜியத்தை அதிகத் திறமையுடன் ஆண்டுவந்தார். அவர் காலத்தில் குப்த ராஜ்ஜியம் அதிக செழிப்பும் வளமும் அடைந்திருந்தது. நியாயம் வழங்குவதில் அவர் அதிக நிபுணர். நாட்டில் அமைதி இருந்ததால் ஜனங்கள் அதிக சௌக்கியமாக வாழ்ந்து வந்தார்கள்.

விக்கிரமாதித்தியர் நாணயம்

சந்திரகுப்த விக்ரமாதித்யர் காலத்தில் கல்வி அதிகமேன்மை அடைந்தது. அவர் பல வித்வான்களை ஆதரித்து வந்தார். அவர்களில் அதிகக் கீர்த்தி பெற்ற ஒன்பது வித்வான்களுக்கு 'நவரத்னங்கள்' என்று பெயர். அந்த வித்வான்களில் காளிதாஸர் அதிக தேர்ச்சி பெற்றவர். இவரைத் தவிர ராஜ்ஜியத்தில் பல சிற்ப சாஸ்திரிகளும் சித்திரம் எழுதுவதில் அதிக தேர்ச்சி பெற்றவர்களும் இருந்தார்கள்.

சந்திர குப்த விக்ரமாதித்யர் ஹிந்து மதத்தையும் வடமொழிப் பாஷையையும் அதிகமாக ஆதரித்து வந்

தார். அவர் அநேக கோவில்களையும் மண்டபங்களை யும் கட்டு வித்தார். அவைகளில் சிலவற்றை நாம் இப் பொழுதும் பார்க்கலாம்.

விக்ரமாதித்யர் ஆண்ட காலத்தில் பாஹியன் என்ற பெயருடைய ஒரு சீன யாத்ரிகர் நம் நாட்டிற்கு வந்தார். அவர் பௌத்தமதத்தைச் சேர்ந்தவர். அவர் நம் நாட்டில் பல இடங்களுக்குச் சென்றார். அவர் விக் ரமாதித்யருடைய ஆட்சியைக் குறித்துப் புகழ்ந்து எழு தியிருக்கிறார்.

பிள்ளைகளே! சந்திரகுப்த விக்ரமாதித்யர் நம் நாட் டை அதிக சிறப்பாக ஆண்டதால் அவருடைய கீர்த்தி இன்றைக்கும் அழியாமல் இருக்கின்றது.

வினாக்கள்.

1. சந்திரகுப்தருக்கு விக்ரமாதித்யர் என்று பெயர் வர காரணம் கூறுக?

2. இவர் காலத்தில் ஜனங்கள் சுகமாயிருக்க காரணம், இவரிடத்தில் கீர்த்திப் பெற்ற வித்வான்களுக்குள் தேர்ச்சி பெற்ற வர் யார், இவர் எந்த மதத்தையும் பாஷையும் ஆதரித்தார்?

3. இவ்வரசரால் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மைகளைக் கூறுக?

---

9. ஹர்ஷர்

சந்திர குப்த விக்ரமாதித்யருக்குப் பிறகு வட இந் தியாவில் ஹர்ஷர் அதிகக் கீர்த்தி வாய்ந்தவர். அவர் கி. பி. ஏழாவது நூற்றாண்டில் தானேஸ்வரம் என்ற

இடத்தில் ஆண்டுவந்தார். அரசரானபிறகு அவர் கானேஜ் நகரத்தைத் தன் தலைநகரமாக்கிக்கொண்டார்.

அவர் பல சிற்றரசர்களை ஜெயித்து வடஇந்தியா முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார். பிறகு தக்ஷிண நாட்டின்மீது படையெடுத்துச் சென்றார். ஆனால் அவரைப் புலகேசி என்ற ஒரு அரசன் தோற்கடித்து விட்டான். ஆகையால் அவர் தென் இந்தியாவை ஜெயிக்கும் எண்ணத்தை விட்டுவிட்டார்.

ஹர்ஷர் தன் ராஜ்ஜியத்தை அதிக சிறப்புடன் ஆண்டுவந்தார். அவர் தன் குடிகளுக்குப் பல செளகர்யங்களைச் செய்தார். அதிகமாக இருந்த நிலவரியைக் குறைத்தார். பல சாலைகள் போட்டுச் சத்திரங்கள் தர்ம வைத்ய சாலைகள் முதலியவைகளைப் பல இடங்களில் ஏற்படுத்தினார். அவர் படிப்பில் அதிக தேர்ச்சி பெற்றவராக இருந்ததால் பல வித்வான்களை ஆதரித்து வந்தார்.

ஹர்ஷர் பௌத்த மதத்தில் அதிக பற்று உடையவர். அவர் அந்த மதத்தைத் தழுவிய போதிலும், ஹிந்து மதத்தையும் நிராகரிக்கவில்லை. ஹிந்து மதத்தையும் ஆதரித்து வந்தார். ஹர்ஷர் காலத்தில் ஹுவான் சாங் என்ற பெயருடைய சீன யாத்ரிகர் இந்தியாவிற்கு வந்தார். அவர் ஹர்ஷர் ஆட்சியைக் குறித்த விவரங்களை ஒரு புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார்.

பிள்ளைகளே! ஹர்ஷர் கல்வியையும் பௌத்த மதத்தையும் அதிகமாக ஆதரித்து வந்ததால் அவருடைய கீர்த்தி நாடெங்கும் அதிகமாகப் பரவிற்று. அவர் நம்நாட்டில் ஆண்ட அரசர்களில் அதிக மேன்மை பெற்றவர் என்பதை நாம் மறக்கக் கூடாது.

வினாக்கள்.

1. ஹர்ஷர் வட இந்தியா முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் எவ்விதம் கொண்டு வந்தார், எவ்விடத்தை தன் தலைநகரமாக்கினார்?

2. ஹர்ஷர் தென் இந்தியா மீது படையெடுக்கும் எண்ணத்தை விட்டு விட காரணம் கூறுக?

3. இவர் காலத்தில் குடிகளுக்கு ஏற்பட்ட அதிக நன்மைகள் எவை, இவர் ஆட்சியைப் பற்றி யார் எழுதி வைத்திருக்கிறார்?

---

10. இயேசுநாதர்

பிள்ளைகளே! நீங்கள் நம் நாட்டில் கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்த அநேகரைப் பார்க்கிறீர்கள். அவர்களுடைய மதத்தை ஸ்தாபித்தவர்தான் இயேசுகிறிஸ்து என்பவர்.

இயேசு கிறிஸ்துவானவர் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு தென் மேற்கு ஆசியாவிலுள்ள பாலஸ்தீனம் என்ற தேசத்தில் ஒரு எளிய யூத குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தாயின் பெயர் மேரி.

இயேசு நாதர் அறிவிலும் ஞானத்திலும் அதிக முதிர்ந்தவர். ஜனங்களிடத்தில் பரம அன்பு கொண்டிருந்தார். அவர்களை நல்ல வழியில் திருப்பிக் கடவுளி

டத்தில் அன்பு உடையவர்களாகச் செய்ய வேண்டு மென்று அதிகப் பிரயாசை பட்டார். அவர் ஜனங்

இயேசுநாதர்

களுக்காக தான் எவ்வித தியாகமும் செய்வதற்கும் தயா ராக இருந்தார். ஆனால் முதலில் அவரைச் சிலர்தான் பின்பற்றி நடந்தார்கள்.

அக்காலத்திலுள்ள யூதர்கள் இயேசுநாதரை வெறுத்தார்கள். அவர்கள் அவர் மீது வீண் குற்றத்தைச் சாட்டினார்கள். அவர்களுடைய அரசர் இயேசு நாதரைச் சிலுவையில் அறையும்படி உத்தரவிட்டார். இயேசுநாதர் சாகும் தருவாயிலும் தன் விரோதிகளிடத்தில் வெறுப்புக் காண்பிக்க வில்லை. தனக்குத் தீமை விளைத்த வரிடத்திலும் கூட அவர் தன் அன்பைக்காட்டினார். தான்செய்தது நியாயம் என்று உணர்ந்த இயேசு நாதர் சந்தோஷமாக சிலுவையில் தன் உயிரை விட்டார்.

இயேசு நாதருடைய சிஷ்யர்கள் அவர் உபதேசித்து வந்த மதக் கொள்கைகளைப் பல தேசங்களிலும் பரவும்படி செய்தார்கள். இப்பொழுது உலகத்தில் பல கோடிக் கணக்கான கிறிஸ்துவர்கள் இருக்கின்றார்கள்.

பிள்ளைகளே! இயேசு நாதர் உங்கள் மதத்தைச் சேர்ந்தவராக இல்லாவிட்டாலும் அவருடைய அரிய பெரிய குணாதிசியங்களை மெச்சி அவரை உலகத்தில் அவதரித்த மஹான்களில் ஒருவராக நீங்கள் பாவிக்க வேண்டும். அவருடைய நற்செய்கைகளை நாம் பின்பற்றி நடக்க வேண்டும்.

வினாக்கள்.

1. இயேசுவானவர் எவ்விடத்தில், எப்பொழுது, எக்குடும்பத்தில் பிறந்தார், அவர் ஸ்தாபித்த மதம் எது கூறுக?

2. இயேசு ஜனங்களை எவ்வழிக்குக் கொண்டுவர முயன்றார்? இவரை வெறுத்தவர்கள் யார்; அவர்களால் ஏற்பட்ட தீங்கு என்ன?

பூர்வீக தென்னிந்திய ராஜ்ஜியங்கள்



11. பூர்வீக தென் இந்திய ராஜ்ஜியங்கள்

பிள்ளைகளே! நாம் இதுவரையில் வட இந்தியாவில் ஆண்டுவந்த அரசர்களைப் பற்றியே படித்து வந்தோம். இப்பொழுது நாம் தென்இந்தியாவில் ஆண்டு வந்த அரசர்களைப் பற்றி சற்றுக் கவனிப்போம்.

தென் இந்தியாவில் திராவிடர்கள் பல இராஜ்ஜியங்களை ஸ்தாபித்தார்கள்: அவைகளில் சேர, சோழ, பாண்டிய ராஜ்ஜியங்கள் முக்கியமானவை. பக்கத்திலுள்ள படத்தில் இந்த ராஜ்ஜியங்களுடைய, விஸ்தீரணங்களை கவனியுங்கள். இந்த மூன்று ராஜ்ஜியங்களையும் ஆண்டுவந்த அரசர்களுக்கு மூவேந்தர் என்று பெயர். இந்த ராஜ்ஜியங்களுக்கு வடக்கே உள்ள பிரதேசத்தில் பல்லவ அரசர்கள் ஆண்டுவந்தார்கள்.

சேர ராஜ்ஜியம்

சேர ராஜ்ஜியத்தைக் கேரள ராஜ்ஜியம் என்றும் சொல்லுவார்கள். முன்காலத்தில் சேர நாடு தமிழ் நாடாக இருந்தது. அப்பொழுது அங்கு தமிழ் மொழி வழங்கிவந்தது.

சேர அரசர்களில் செங்குட்டுவன் என்ற அரசன் அதிக கீர்த்திவாய்ந்தவன். செங்குட்டுவன் ஒரு சமயத்தில் சோழ அரசர்களின் பகைவர்களைத் தோற்கடித்தான் அவன் வட இந்தியாவின் மீது படையெடுத்துச் சென்று அங்குள்ள அரசர்களைத் தோற்கடித்தான்.

இவ்வாறாக செங்குட்டுவன் காலத்தில் சேர ராஜ்ஜியம் அதிக மேன்மை பட்டிருந்தது.

சோழ ரராஜ்ஜியம்

முன்காலத்தில் சோழமன்னர்கள் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசத்தை ஆண்டு வந்தார்கள். சோழ ராஜ்ஜியம் அதிக செழிப்பான பிரதேசமாக இருந்தது. முதலில் உறையூர் சோழ மன்னர்களுடைய தலை நகரங்களாக இருந்தது. பிறகு தஞ்சாவூரும் காஞ்சீபுரமும் அவர்களுடைய தலை நகரங்களாக ஆயின.

சோழ அரசர்களில் ராஜ ராஜசோழர் அதிக கீர்த்தி வாய்ந்தவர். அவர் கி. பி. 10-வது நூற்றாண்டில் ஆண்டு வந்தார். அப்பொழுது சோழ ராஜ்ஜியத்திற்கு தஞ்சாவூர் தலை நகரமாக இருந்தது.

ராஜ ராஜ சோழர் ஒரு பெரிய யுத்த வீரர். அவர் பல நாடுகளை ஜெயித்து தென்னிந்தியாவின் பெரும் பாலான பாகத்தை ஆண்டு வந்தார். அவர் தன் குடி களிடத்தில் அதிக அன்பு உள்ளவர். ஜனங்கள் அவர் காலத்தில் அதிக முன்னேற்றம் அடைந்திருந்தார்கள்.

ராஜ ராஜ சோழர் சைவமதத்தில் அதிக பற்று உள்ளவர் அவர் பல சிவன் கோவில்களைக் கட்டுவித் தார். நீங்கள் படத்தில் பார்க்கும் பிரகதீசுவரர் கோவில் அவர் காலத்தில் தான் கட்டப்பட்டது.

அந்த ஆலயத்தின் கோபுரம் அதிக உயரமாகவும் அழகு உள்ளதாகவும் இருக்கின்றது. கோவிலுக்கு



பிரகதீஸ்வரர் கோயில்

முன்புறத்தில் ஒரே கல்லினுல் செய்யப்பட்ட ஒரு பெரிய நந்தி இருக்கின்றது. பிரகதீஸ்வரர் கோவிலை நாம் இன்றைக்கும் தஞ்சாவூரில் பார்க்கலாம்.

பிள்ளைகளே! ராஜராஜ சோழருடைய புகழ் இன்றைக்கும் அழியாமல் இருக்கின்றது. ஏனென்ருல் அவர் பல அழகிய கோவில்களைக் கட்டுவித்தார்.

பாண்டிய ராஜ்ஜியம்

பாண்டிய நாடானது இப்பொழுது உள்ள திருநெல்வேலி இராமனுதபுரம் மதுரை முதலிய ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசமாக இருந்தது. பாண்டிய ராஜ்ஜியத்திற்கு குலசேகர பாண்டியன் காலத்தில்தான் மதுரை தலை நகரமாக்கப்பட்டது. பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள் அயல் நாட்டிலுள்ளவர்களுடன் வியா

பாரம் செய்து வந்தார்கள். பாண்டிய அரசர்கள் தமிழ்ப் பாஷையை ஆதரித்துவந்தார்கள். அவர்கள் காலத்தில் பல தமிழ் நூல்கள் இயற்றப்பட்டன.

பாண்டிய அரசர்களில் சுந்தரபாண்டியர் அதிக கீர்த்தி பெற்றவர். அவர் கி. பி. 13-வது நூற்றுண்டில் ஆண்டுவந்தார். அவர் முதலில் ஜைன மதத்தை ஆதரித்து வந்தார். பிறகு திருஞான சம்பந்தர் என்ற சிவ பக்தரின் உபதேசத்தால் சைவ மதத்தைத் தழுவி அந்த மதத்தை அதிகமாக ஆதரித்தார். இவருக்கு நெடுமாறன், கூன் பாண்டியர் என்ற மற்ற பெயர்களும் உண்டு.

பல்லவர்கள்

சேர, சோழ, பாண்டிய ராஜ்ஜியங்களுக்கு வடக்கே வசித்து வந்த பல்லவர் என்ற திராவிடர்கள் காஞ்சீவரத்தைத் தலை நகரமாகக் கொண்ட ஒரு ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தார்கள். சேர, சோழ, பாண்டிய அரசர்கள் ஒருவருடன் மற்றொருவர் அடிக்கடி சண்டை செய்து கொண்டு வந்ததால் பல்லவ அரசர்கள் தங்களுடைய ராஜ்ஜியத்தைத் தென் இந்தியாவில் அதிகமாக பரவும்படி செய்தார்கள். பல்லவர்களின் ராஜ்யம் அதிக உன்னத ஸ்திதியை அடைந்தது.

பல்லவ அரசர்களில் மஹேந்திர வர்மன் அதிக கீர்த்தி வாய்ந்தவன். அவன் முதலில் சமண மதத்தைத் தழுவினன். பிறகு திருநாவுக்கரசு என்ற சிவ பக்தரின்

உபதேசத்தால் சைவ மதத்தைத் தழுவினுன். இவர் காலத்தில் பலசிவாலயம், விஷ்ணு ஆலயங்கள் கட்டப் பட்டன. இவர் காலத்தில்தான் சைவ, விஷ்ணு மதங் கள் தென் இந்தியாவில் தலை எடுக்க ஆரம்பித்தன.

மஹேந்திர வர்மன் குமாரனுகிய நரசிம்ம வர்மன் தன் தந்தையைக் காட்டிலும் அதிக கீர்த்தியை அடைந் தான். இவன் காலத்தில் பல்லவ ராஜ்ஜியம் அதிக உன்னத ஸ்திதியை அடைந்தது.

நரசிம்ம வர்மன் காலத்தில்தான் மஹாபலிபுரத் தில் ஏழு குகைக் கோவில்கள் பாறைகளால் வெட்டப் பட்டன. மஹாபலிபுரம் காஞ்சீபுரத்திற்கு நேர் கிழக்கே



மஹாபலிபுரம்

உள்ள சமுத்திரக்கரையில் இருக்கின்றது. பிள்ளைகளே! அந்தக் குகைக்கோயில்களின் படத்தை மேலே பாருங்கள். இந்தக் கற்கோவில்கள் அக்காலத்திலிருந்த சிற்ப வேலைக்காரர்களின் திறமையைக் காட்டுகின்றன.

சில காலத்திற்குப் பிறகு சோழ மன்னர்களால் பல்லவ அரசர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். பல்லவர்களுடைய ராஜ்ஜியம் நாளடைவில் மறைந்துபோனாலும் அவர்கள் கட்டின கோவில்களை இன்றைக்கும் நாம் பார்க்கின்றோம்.

வினாக்கள்.

1. தென்னிந்தியாவில் திராவிடர்கள் ஸ்தாபித்த இராஜ்யங்களுள் முக்கியமானவை எவை; இவைகளை ஆண்ட அரசர்கள் யார்?

2. சேர இராஜ்யத்துக்கு மற்றொரு பெயர் என்ன, சேர அரசர்களில் கீர்த்திவாய்ந்தவர் எவர்?

3. சோழ மன்னர்கள் எந்த பிரதேசத்தை ஆண்டனர், இவர்களில் கீர்த்திவாய்ந்த அரசர் யார், அவர் எந்த நூற்றாண்டில் அரசு புரிந்தார்?

4. ராஜராஜசோழர் காலத்தில் ஜனங்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் எவை, அவர் புகழ் இன்றும் அழியாதிருக்க காரணம் என்ன?

5. பாண்டிய நாடு எது, இதில் கீர்த்திபெற்ற அரசர் யார்?

6. பல்லவ அரசர்கள் இராஜ்யத்தை எவ்விதம் பரவச் செய்தார்கள், மஹேந்திர அரசனால் என்னென்ன ஆலயங்கள் கட்டப்பட்டன, இவ்வரசர்களில் யாருடைய காலத்தில் மஹாபலிபுரம் கோயில் வெட்டப்பட்டது; பல்லவ அரசர்கள் க்ஷீணித்துபோக காரணம் என்ன கூறுக.

12. மூன்று ஹிந்து மதாச்சார்யர்கள்

நம் நாட்டில் பௌத்த சமண மதங்கள் தோன்றின. ஆகையால் ஜனங்களுக்கு ஹிந்து மதத்தில் நம்பிக்கை குறைந்து கொண்டே வந்தது. அப்பொழுது 'தென் நாட்டில் சில மதாச்சாரியர்கள் தோன்றி ஹிந்து மதத்தை நிலை நாட்டினார்கள். அவர்களில் சங்கரர், இராமானுஜர் மத்வாசாரியர், முக்கிய மானவர்கள்.



ஸ்ரீமத் சங்கரர்

ஸ்ரீமத் சங்கரர் 8-வது நூற்றாண்டில் மலையாளத்திலுள்ள காலடி என்ற ஊரில் உள்ள ஒரு நம்பூத்ரி பிராம்மண குலத்தில் பிறந்தார். அவர் 16-வது பிராயத்தில் பல சாஸ்திரங்களைக் கற்றார். பிறகு துறவியாகி காசி நகரத்திற்குச் சென்றார். அங்கே சிலகாலம் தங்கி இருந்துவிட்டுத் தென் நாட்டிற்கு வந்து மத போதனை செய்தார். பிறகு அவர் காஞ்சீபுரத்தில் ஒரு மடத்தை

ஸ்தாபித்தார். அவருடைய கொள்கைக்கு அத்வைதம் என்று பெயர். சங்கரருடைக் கொள்கையின்படி சிவன் விஷ்ணு முதலிய தெய்வங்கள் ஒன்ருக பாவிக்கப்பட வேண்டும். சங்கரர் அவரது 32-வது வயதில் உயிர் துறந்தார்.

ஸ்ரீமத் ராமானுஜர் 11-வது நூற்ருண்டில் செங்கல் பட்டு ஜில்லாவிலுள்ள ஸ்ரீபெரும்புதூர் என்ற கிராமத்தில் பிறந்தார். அவர் சிறு வயதிலேயே ஒரு குருவினிடம் சகல சாஸ்திரங்களையும் கற்றுக்கொண்டார். கொஞ்ச காலத்திற்கு பிறகு துறவியானுர். அதன் பிறகு குலோத்துங்க சோழன் அவரிடம் விரோதம் கொண்டதால் அவர் மைசூருக்குச் சென்ருர். ஸ்ரீராமானுஜருடைய கொள்கைக்குவிசிஷ்டாத்வைதம் என்று பெயர்.



ஸ்ரீமத் ராமானுஜர்

ஸ்ரீராமானுஜர் கொள்கையின்படி ஜாதியைக் காட்டிலும் பக்தியே மேலானதாக பாவிக்கப்படுகின்றது. அவர் பல இடங்களில் வைஷ்ணவ மடங்களை ஸ்தாபித்தார். நாளடைவில் வைஷ்ணவமதக் கொள்கைகள் நம் நாட்டில் நாலாபக்கங்களிலும் பரவின.

ஸ்ரீமத்வாசாரியரும் சங்கரர் ராமானுஜரைப் போல் ஒரு பெரிய மதாச்சார்யர். அவர் தென் கன்னடஜில்லா

விலுள்ள உடுப்பி என்ற ஊரில் 12-வது நூற்றுண்டில் பிறந்தார். அவர் சகல சாஸ்திரங்களையும் கற்ற பிறகு துறவியானுர். மத்வருடைய கொள்கைக்குத் துவைதம் என்று பெயர். அவர் ராமானுஜரைப் போல விஷ்ணு பக்தியின் சிறப்பை எடுத்து விளக்கினுர். அவருடைய கொள்கைகளைப் பின்பற்றி நடப்பவர்கள்; கிருஷ்ணர் ஆஞ்சிநேயர் முதலிய தெய்வங்களைத் துதிக்கின்றுர்கள். ஸ்ரீமத்வர் பல மடங்களை ஸ்தாபித்தார்.

ஸ்ரீமத்வாச்சாரியார்

பிள்ளைகளே! ஸ்ரீமத் சங்கரர், ராமானுஜர், மத்வர் முதலிய மதாச்சார்யர்களுடைய மதபோதனைகளால் ஹிந்து மதம் புத்துயிர் பெற்று நம் நாட்டில் மறுபடியும் உன்னத ஸ்திதியை அடைந்தது. ஆகையால் நாம் அவர்களை பெரியார்களாக பாவிக்கவேண்டும்.

வினுக்கள்.

1. தென்னுட்டில் எந்த சமயத்தில் மதாச்சாரியர்கள் தோன்றினர்; அவர்கள் பெயர் என்ன?

2. சங்கரர் எந்த நூற்றுண்டில் தோன்றினர், அவர்செய்த உபதேசம் என்ன, அவரது கொள்கைக்கு பெயர் யாது? இக்கொள்கையின் நோக்கம் எது?

3. இராமானுஜர் எந்த நூற்றுண்டில் எந்த இடத்தில்பிறந்தார், இவர் மைசூருக்குப்போக காரணம் என்ன, இவரது கொள்கைக்கு என்ன பெயர், அக்கொள்கையின் முக்கியமென்ன?

4. மத்வாச்சாரியார் எப்பொழுது எந்த இடத்தில் பிறந்தார், இவரது கொள்கைக்கு என்ன பெயர், இவர் எதை விளக்கினர், இவரது சிஷ்யர்கள் எதை வணங்குகிறர்கள்கூறுக?

---

13. முகம்மத் நபி

பிள்ளைகளே! நாம் நம் தேசத்தில் முகம்மதிய மதத்தைச் சேர்ந்த பல இந்தியர்களைப் பார்க்கின்றேம். அவர்களுடைய மதத்தை ஸ்தாபித்தவர்தான் முகம்மத் நபி என்று பெயர்.

முகம்மத் நபி அரேபியா தேசத்திலுள்ள மெக்கா என்னும் ஊரில் 6-வது நூற்றுண்டில் பிறந்தார். அவர் சிறுவயதிலேயே தாய்த் தந்தையர்களை இழந்தார். பிறகு அவர் கடிஜா என்ற பெயருடைய ஒரு செல்வம் மிகுந்த கைம்பெண்ணின் வீட்டில் வேலை செய்து வந்தார். முகம்மத் அறிவிலும் குணத்திலும் மேன்மை பெற்றவராக இருந்ததால் கடிஜா அவரை மணந்தாள்.

முகம்மத் வசித்து வந்த காலத்தில் அராபியர்கள் நாகரீக மில்லாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் பல தெய்வங்களை ஆராதித்து வந்தார்கள். ஆகையால் முகம்மத் அவர்களை நல்ல வழியில் திருப்ப உத்தேசித்து ஒரு புதிய மதத்தை ஸ்தாபித்தார். அதன்படி யாவரும் சகோதரர்களைப் போல பாவிக்கப்பட வேண்டு

மென்றும், விக்ரகங்களை ஆராதிக்கக் கூடாது என்றும் போதித்தார். ஆனால் இவருடைய உபதேசம் அராபி யர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் அவர்கள் முகம்மதைக் கொல்ல உத்தேசித்தார்கள்.

இதை யறிந்த முகம்மத் மெக்காவிலிருந்து மெடினா என்ற ஊருக்கு ஓடிச் சென்று தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டார். இங்கே பலர் இவருடைய புதிய மதத்தைப் பின் பற்றி நடந்தார்கள். பிறகு முகம் மத் ஒரு பெரிய சேனையைத் தயார் செய்து மெக்காவின் மீது படையெடுத்துச் சென்றார். சண்டையில் முகம்மத் தன் விரோதிகளைத் தோற்கடித்தார். பிறகு அவர் மதம் அரேபியா முழுவதிலும் பரவிற்று. நாளடை வில் முகம்மதிய மதம் பல நாடுகளில் பரவியது. முகம் மதிய மதம் நம் நாட்டிலும் பரவியிருக்கின்றது. இப் பொழுது நம் நாட்டில் சுமார் 8 கோடி முகம்மதியர்கள் இருக்கின்றார்கள்.

பிள்ளைகளே! முகம்மதிய மதம் உலகத்திலுள்ள பெரிய மதங்களில் ஒன்றாக விளங்குகிறது. நம் நாட் டில் உள்ள மதங்களில் முகம்மதிய மதம் முக்கியமான மதமாக இருக்கிறது. நாம் முகம்மதியர்களுடன் அன் னியோன்னியமாக இருக்கவேண்டும். அவ்வாறு நாம் ஜாதிமத வித்தியாசமில்லாமல் வாழ்ந்து வந்தால்தான் நம் நாடு முன்னேற்றமடையும் என்பதை நாம் உணர வேண்டும்.

வினாக்கள்.

1. முகம்மது நபி ஸ்தாபித்த மதத்தின் பெயர் என்ன, அம் மதத்தின் கொள்கை யாது?

2. முகம்மது நபி மெடினாவிற்கு ஓடக் காரணம் என்ன?

3. இவருடைய மதம் பிறகு எப்போது எங்கு அதிகம் பரவலாயிற்று கூறுக?

---

14. கஜினி முகம்மத்

பிள்ளைகளே! இந்தியாவிற்கு வட மேற்கில் ஆப்கானிஸ்தானம் என்ற ஒரு முகம்மதிய ராஜ்ஜியம் இருக்கின்றது. சுமார் 1000 வருஷங்களுக்கு முன் அந்த ராஜ்ஜியத்திற்குக் கஜினி என்ற ஊர் தலைநகரமாக இருந்தது. அப்பொழுது ஆப்கானிஸ்தானத்தை முகம்மத் என்பவர் ஆண்டுவந்தார். அவரைத்தான் கஜினி முகம்மத் என்று சொல்லுகிறார்கள்.

கஜினி முகம்மத் அதிக பேராசை பிடித்தவர். அவர் இந்தியா செல்வம் மிகுந்த நாடு என்பதைக் கேள்விப்பட்டு இந்தியாவின்மீது படையெடுத்து வர உத்தேசித்தார். அவர் நம் நாட்டின்மீது பன்னிரண்டு முறை படையெடுத்து வந்து ஏராளமான செல்வத்தை அபகரித்துச் சென்றார்.

அக்காலத்தில் மேற்கு இந்தியாவிலுள்ள கூர்ஜர நாட்டின் கடற்கரையோரத்தில் சோமநாதபுரம் என்ற நகரமிருந்தது. அதில் அதிக செல்வம் உள்ள கோவில்

ஒன்று இருந்தது. அந்தக் கோவிலின் அபரிமிதமான செல்வத்தைப்பற்றி கேள்விப்பட்ட கஜினி முகம்மத் அந்தக் கோவிலைக் கொள்ளையடிக்க உத்தேசித்துச் சோமனுதபுரத்தைத் தாக்கினர். இதைக் கேள்விப்பட்ட இந்துக்கள் கோவிலின் கதவை மூடிவிட்டார்கள். அநேக போர்வீரர்கள் ஆயுதங்களுடன் கோவிலைக் காக்க முன் வந்தனர். முகம்மதியர்கள் மூன்று நாட்கள் சண்டை செய்து இந்துக்களைத் தோற்கடித்தார்கள்.

பிறகு முகம்மத் தன் சேனைகளுடன் கோவிலுக்குள் நுழைந்தார். அப்பொழுது கோவிலின் அர்ச்சகர்கள் முகம்மத் விக்ரஹத்தை உடைக்காமல் விட்டு விட்டால் ஏராளமான பொருள்களைக் கொடுப்பதாகச் சொன்னர்கள். ஆனாலும் முகம்மத் அந்த 15 அடி உயமுள்ள விக்ரஹத்தைத் தன் கையிலுள்ள இரும்பு ஆயுதத்தால் உடைத்துச் சின்னபின்னப்படுத்தி விட்டார். உடனே விக்ரஹத்தின் அடியிலுள்ள ரத்தினங்களும் மற்ற விலை உயர்ந்த கற்களும் கல கல வென்ற சப்தத்துடன் கீழே விழுந்தன. முகமத் அந்தச் செல்வங்களை வாரிக் கொண்டு தன் தேசத்திற்குத் திரும்பிச் சென்று விட்டான்.

பிள்ளைகளே! அக்காலத்தில் இந்துக்கள் அதிக ஒற்றுமை யில்லாமல் இருந்ததால்தான் முகமதியர்களால் சுலபமாக தோற்கடிக்கப்பட்டார்கள். அதனல் தங்கள் செல்வங்களையும் கோவில்களையும் அவர்கள் இழக்கும்படி நேரிட்டது.

வினுக்கள்

1. கஜினி முகம்மது இந்தியாவின் மீது படை எடுத்து வரக் காரணம் என்ன, இவர் எத்தனை முறை படையெடுத்து வந்தார்?

2. இவர் இந்தியாவில் கொள்ளையடித்ததில் எது பிரசித்தி பெற்றது?

---

15. பிருதிவி ராஜனும்—ராணி சம்யுக்தையும்

சுமார் 800 வருடங்களுக்கு முன்பு வட இந்தியாவில் ராஜபுத்திரர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் அதிக தைரியமுடைய போர்வீரர்கள். ஆனுல் அவர்கள் ஒற்றுமையில்லாமல் அடிக்கடி ஒருவருடன் ஒருவர் சண்டை செய்து கொண்டிருந்தார்கள்.

12-வது நூற்ருண்டில் வடக்கு இந்தியாவில் டில்லி, கானேஜ் என்ற இரண்டு ராஜபுத்திர ராஜ்ஜியங்கள் இருந்தன. டில்லி ராஜ்ஜியத்தில் பிருதிவி ராஜன் என்ற அரசன் ஆண்டுவந்தான். கானேஜ் ராஜ்ஜியத்தை ஜயச்சந்திரன் என்ற மற்ருெரு ராஜபுத்திர அரசன் அரசு புரிந்து வந்தான். இந்த இரண்டு அரசர்களும் விரோதம்பாராட்டி வந்தார்கள். பிருதிவி ராஜன் அதிக கீர்த்தி யடைந்ததைக் கண்ட ஜயச்சந்திரன் அவரிடம் பொருமை கொண்டான்.

ஜயச்சந்திரனுக்குச் சம்யுக்தை என்ற ஒரு அழகிய பெண் இருந்தாள். அவளை மணந்துகொள்ள பல அரசர்கள் விரும்பினுர்கள். ஆனுல் சம்யுக்தை பிருதிவி ராஜனையே மணக்க விரும்பினுள். ஜயச்சந்திரன் சம்யுக்தையின் சுயம் வரத்திற்குப் பிருதிவியை அழைக்க

வில்லை. அவனை அவமானம் செய்ய எண்ணி பிருதிவி யைப் போன்ற ஒரு உருவம் செய்து சுயம்வர மண்டப வாசலில் வைத்தான். சுயம்வர மண்டபத்திற்கு வந்த சம்யுக்தை அங்கு வீற்றிருந்த அரசர்களின் கழுத்தில்

பிருதிவி சம்யுக்தையைத் தூக்கிச் செல்லுதல்

மாலையிடாமல் பிருதிவியினுடைய உருவத்தின் கழுத் தில் மாலையைப் போட்டாள். அச்சமயம் வெளியில் மாறுவேடம் பூண்டு நின்றுகொண்டு இருந்த பிருதிவி ராஜன் சம்யுக்தையைத் தனது குதிரையின் மீது ஏற்றி

வைத்துக்கொண்டு டில்லிக்குச் சென்முன். பிறகு டில்லியில் சம்யுக்தையை மணந்தான்.

அச்சமயம் ஆப்கானிஸ்தானத்தில் முகம்மத் கோரி என்பவர் அரசுபுரிந்து வந்தார். பிருதிவியின் மீது கோபம்கொண்ட ஜயச்சந்திரர் முகம்மத்கோரியின் உதவியைப் பெற்றுப் பிருதிவி ராஜனை எதிர்த்துச் சண்டைசெய்தான். அச்சண்டையில் பிருதிவி ராஜன் அதிகதைரியத்தோடு சண்டைசெய்தபோதிலும் ஜயச்சந்திரனுல் கொல்லப்பட்டார். இச்செய்தியைக் கேள்விப்பட்ட ராணி சம்யுக்தை அக்னிப்பிரவேசம் செய்து உயிரை மாய்த்துக் கொண்டாள். பிறகு முகம்மத் கோரி ஜயச்சந்திரனையும் கொன்றுவிட்டு வடஇந்தியாவிலுள்ள ராஜ்ஜியங்களைச் சுலபமாக ஜெயித்துவிட்டான்.

பிள்ளைகளே! ஒற்றுமையில்லாத ராஜபுத்திர அரசர்கள் எவ்வாறு அயல் நாட்டு அரசர்களால் தோற்கடிக்கப் பட்டார்கள் என்பதை கவனியுங்கள். ராஜபுத்திர அரசர்கள் பெரிய போர்வீரர்களாக இருந்தும் அவர்களுக்குள் ஒற்றுமை யில்லாததால் முகம்மதிய அரசர்களால் சுலபமாக தோற்கடிக்கப் பட்டார்கள்.

வினுக்கள்.

1. பிருதிவி ராஜனிடம் ஜயச்சந்திரன் பொருமை கொள்ள காரணம் என்ன ?

2. சம்யுக்தை யாருடைய புத்திரி, அவள் யாரை மணக்க விரும்பினுள், எவ்விதம் விவாகம் முடிந்தது ?

3. முகம்மத்கோரி பிருதிவியின்மீது கோபம்கொண்டு என்ன செய்தான், ராஜபுத்திர அரசர்கள் போர் வீரர்களாயிருந்தும் இவர்களை சுலபமாகத் தோற்கடிக்க காரணம் என்ன கூறுக ?

16. பத்மினி

பிள்ளைகளே! நம் நாட்டில் முன்காலத்தில் அதிக உத்தம குணமுடைய பெண்கள் இருந்திருக்கின்றார்கள். அவர்களில் ராணி பத்மினி என்ற ராஜபுத்திர அரசி அதிக கீர்த்திவாய்ந்தவள்.

வடஇந்தியாவில் 14-வது நூற்றாண்டில் மேவார் என்ற ஒரு சிறு ராஜபுத்திர ராஜ்ஜியம் இருந்தது. அதற்கு சித்தூர் என்ற ஊர் தலைநகரமாக இருந்தது. மோரின் அரசனாகிய பீம்சிங் என்பவருக்குப் பத்மினி என்ற பெயருடைய ஒரு அழகிய மனைவி இருந்தாள். அவள் அதிக உத்தம குணமுடையவள். பத்மினி மற்ற ராஜபுத்திரர்களைப்போல அதிக தைரியம் வாய்ந்தவள்.

அப்பொழுது டில்லியில் கில்ஜி வம்சத்தைச் சேர்ந்த அல்லாஉதீன் என்ற முகம்மதிய அரசன் ஆண்டு வந்தான். அவன் அதிக கெட்ட எண்ணமுடையவன். அல்லாஉதீன் பத்மினியின் அழகைப்பற்றிக் கேள்விப்பட்டு அவளை எப்படியாவது மணக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தைக் கொண்டான். ஆகையால் அவன் ஒரு பெரிய சேனையுடன் சித்தூரை முற்றுகையிட்டான். ராஜபுத்திரர்கள் அதிக தைரியத்துடன் சண்டை செய்ததால் அல்லாஉதீன் சித்தூரைப் பிடிக்க முடியவில்லை. ஆகையால் பத்மினியை ஒரு சூழ்ச்சியால் அடைய எண்ணினான். அல்லாஉதீன்

பீம்சிங்குக்குத் தனக்குப் பத்மினியின் பிரதிபிம்பத்தைக் கண்ணுடியில் காட்டிவிட்டால், டில்லிக்குத் திரும்பிப் போய்விடுவதாகச் செய்தி சொல்லி அனுப்பினுன். பீம்சிங் அல்லாஉதீனை நம்பி அதற்கு உடன்பட்டான்.



பத்மினியை அல்லாஉதீன் கண்ணுடியில் காணுதல்

அல்லாஉதீன் பத்மினியின் அழகைக் கண்ணுடியில் பார்த்த பிறகு அதிக ஆச்சர்யத்தை அடைந்தான். பிறகு பீம்சிங் அல்லாஉதீனை வழியனுப்புவதற்காக

கோட்டையைவிட்டு வெளியே வந்தசமயத்தில் அல்லா உதீன் பீம்சிங்கை வஞ்சகமாக கைதியாக்கினுன்.

உத்தம குணம் வாய்ந்த பத்மினி தன் கணவனை எப்படியாவது மீட்கவேண்டுமென்று மன உறுதி கொண்டாள். அல்லாஉதீன் தன்னைப்பத்மினி மணந்து கொண்டால் அவளுடைய கணவனை விட்டுவிடுவதாகச் சொல்லி அனுப்பினுன். பத்மினி ஒரு உபாயம் செய்து தன் கணவனை மீட்க உத்தேசித்தாள். அல்லாஉதீன் சொல்லியபடி தான் நடப்பதாகச் சொல்லித் தான் தன் தோழிகளுடன் மூடப்பட்ட பல்லக்குகளில் வருவதாகச் சொல்லி அனுப்பினுள். இந்தச் செய்தியைக் கேட்ட அல்லாஉதீன் அதிக சந்தோஷமடைந்தான்.

பத்மினி 700 பல்லக்குகளில் ஏழுநூறு போர்வீரர் களைப் பெண்வேடம் தரிக்குமாறு செய்து அவர்களை அனுப்பினுள். தானும் ஒரு பல்லக்கில் அல்லாஉதீன் இருந்த இடத்திற்கு வந்தாள். பல்லக்குகள் வந்து சேர்ந்த பிறகு பத்மினி தன் கணவனைக் கடைசி முறை பார்த்து வருவதாகச் செய்தி சொல்லி அனுப் பினுள். அல்லாஉதீன் அதற்குச் சம்மதித்தான். பத்மினி பீம்சிங் இருந்த இடத்திற்குச் சென்று அவ னுடன் தப்பித்து கொண்டு சித்தூருக்கு சென்று விட்டாள். பெண் வேடம் தரித்த ராஜபுத்திரர்கள் அல்லாஉதீனின் துருப்புகளைத் தோற்கடித்தார்கள். இவ்வாருக அல்லாஉதீன் பெருத்த அவமானத்தை அடைந்தான்.

அதிக கோபங்கொண்ட அல்லாஉதீன் மறுமுறை சித்தூரை முற்றுகை இட்டான். பீம்சிங் சண்டையில் இறந்தான். அந்த செய்தியைக்கேள்விப்பட்ட பத்மினி அக்னியில் விழுந்து உயிர் துறந்தாள். இவ்வாருக ராஜ புத்திரர்களுடைய கௌரவத்தைப் பத்மினி காப்பாற்றி ஞள்.

பிள்ளைகளே! பத்மினியைப் போன்ற பல பெண் மணிகள் நம் நாட்டில் இருந்திருக்கின்றுர்கள். பத்மி னியைப் போல கற்பில் சிறந்து விளங்கிய பெண்மணி களால் நம் நாடு அதிக சிறப்பை அடைந்திருக்கின்றது. நம் நாட்டின் கௌரவத்தை நிலை நாட்டிய பத்மினியின் பெயரை நாம் மறக்கக் கூடாது.

வினுக்கள்.

1. பத்மினியின் அழகைக் கேட்ட அல்லாஉதீன் அவள்மீது கெட்ட எண்ணம் கொண்டு என்ன செய்தான்?

2. பீம்சிங்கை அல்லாஉதீன் எவ்விதம் கைதியாக்கினுன்?

3. பீம்சிங்கை மீட்க பத்மினி என்ன உபாயம் செய்தாள், மருமுறை அல்லாஉதீன் முற்றுகையிட்டதின் முடிவு என்ன, பத் மினி என்னசெய்தாள்?

---

17. விஜயநகர ராஜ்ஜியம்

முகம்மதியர்கள் வட இந்தியாவில் ஆண்டபொழு துத் தென் இந்தியாவில் பல ராஜ்ஜியங்கள் இருந்தன. அவற்றில் விஜயநகர ராஜ்ஜியம் அதிக கீர்த்திவாய்ந்த ராஜ்ஜியமாக இருந்தது.

இப்பொழுது பல்லாரி ஜில்லாவில் ஹம்பி என்ற ஒரு சிறிய கிராமம் இருக்கின்றது. அதற்கு அருகில் தான் 14-வது நூற்றுண்டில் விஜய நகர ராஜ்ஜியத்திற்குத் தலைநகரமான விஜயநகரம் என்ற நகரம் இருந்தது. விஜயநகர ராஜ்ஜியத்தை ஹரிஹரர், புக்கர் என்ற இரண்டு சகோதரர்கள் ஏற்படுத்தினர்கள்.

விஜய நகரம் அதிக அழகு வாய்ந்த நகரமாக விளங்கியது. அதனுடைய தெருக்கள் அதிக அழகாக அமைக்கப்பட்டிருந்தன. அந்நகரில் அநேக அழகிய கோவில்களும் கட்டிடங்களும் கட்டப்பட்டிருந்தன. விஜயநகர ராஜ்ஜியம் சுமார் 250 வருஷங்கள் வரையில் உன்னத ஸ்திதியை அடைந்திருந்தது.

விஜயநகர ராஜ்ஜியத்தை ஆண்டுவந்த அரசர்களில் கிருஷ்ணதேவராயர் அதிக கியாதிபெற்றவர். அவர் ராஜ்ஜியத்தை அதிக திறமையுடன் ஆண்டு வந்தார். அவர் மிகுந்த அன்பும் தயவும் உடையவர். அவர் ஒரு சிறந்த போர்வீரராக இருந்ததால் தென் இந்தியாவின் பெரும்பாலான பாகத்தை ஜெயித்து விஜயநகர ராஜ்ஜியத்தின் கீர்த்தியை அதிகப்படுத்தினர்.

கிருஷ்ணதேவராயர் படித்தவர்களை ஆதரித்து வந்தார்; அவர் ஒரு சிறந்த கவி. அவருக்கு அப்பாஜி என்ற பெயருடைய மந்திரி ஒருவர் இருந்தார். அவர் காலத்தில்தான் தெனலிராமன் என்ற ஆசியக்காரர்

இருந்தார். கிருஷ்ணதேவராயர் அநேக கோவில்களைக் கட்டினார். அவர் கட்டின ஆலயங்களை நாம் இன்றைக்கும் சில இடங்களில் பார்க்கலாம்.

கிருஷ்ணதேவராயர்

கிருஷ்ணதேவராயருக்குப் பின் விஜயநகர ராஜ்ஜியம் அழிய ஆரம்பித்தது. ஏனென்றால் பாமினி ராஜ்ஜியத்தை ஆண்டு வந்த சுல்தான்கள் விஜயநகரத்தின்மீது படையெடுத்து வந்தார்கள். தலைக்கோட்டை என்ற இடத்தில் விஜயநகர அரசன் தோற்கடிக்கப் பட்டான். ராஜ்ஜியத்தை ஜெயித்த பிறகு முகம்மதியர்கள் விஜயநகரத்தைப் பாழாக்கினார்கள். ஆகையால் அந்த நகரம் இருந்த இடத்தில் இப்பொழுது நாம் சில பாழடைந்த கட்டிடங்களைத்தான் பார்க்கலாம்.

பிள்ளைகளே! நாம் இப்பொழுதும் விஜயநகர ராஜ்ஜியத்தை மறக்காமல் இருக்கின்றோம்; ஏனென்றால் அது தென் இந்தியாவிலிருந்த ராஜ்ஜியங்களில் அதிக கீர்த்திவாய்ந்ததாக இருந்தது. மேலும் விஜயநகர அரசர்கள் முகம்மதியர்களுடைய ஆதிக்கியம் தென் இந்தியாவில் பரவாதபடி செய்தார்கள். ஆகையால் ஹிந்துக்கள் விஜயநகர அரசர்களை இன்றைக்கும் மறக்காமல் இருக்கின்றார்கள்.

வினாக்கள்

1. விஜயநகர இராஜ்யத்தை ஏற்படுத்தியவர் எவர்? இந்த இராஜ்யம் எப்படி விளங்கியது? எவ்வளவு காலம் உன்னத நிலையிலிருந்தது?

2. இதில் கீர்த்திபெற்ற அரசர் யார்? அவரால் ஏற்பட்ட நன்மைகள் எவை?

3. கிருஷ்ணதேவராயருக்குப் பிறகு விஜயநகர இராஜ்யத்திற்கு ஏற்பட்ட ஆபத்து என்ன?

4. விஜயநகர இராஜ்யத்தை ஆண்ட அரசர்களை நாம் மறக்காமல் இருக்க என்ன காரணம்?

---

18. முகலாய அரசர்கள்

வட இந்தியாவில் முகம்மதிய அரசர்கள் பத்தாவது நூற்றுண்டு முதல் சுமார் 500 வருஷங்கள் வரையில் ஆண்டுவந்தார்கள். அவர்களுக்குப் பிறகு வட இந்தியாவில் முகலாய அரசர்கள் அரசு புரிந்து வந்தார்கள். முகலாய ராஜ்ஜியத்தை வட இந்தியாவில் பாபர் என்பவர்தான் ஸ்தாபித்தார். அவர் 1526 வருஷத்தில் இப்ராஹீம் லோடி என்ற முகம்மதிய அரசனைப் பானிபட் என்ற இடத்தில் தோற்கடித்துத் தன் ராஜ்யத்தை இந்தியாவில் ஸ்தாபித்தார். பாபருக்குப்பிறகு முகலாய அரசர்கள் இந்தியாவில் சுமார் 200 வருஷங்கள் வரையில் ஆண்டு வந்தார்கள்.

பாபர்

முகலாய ராஜ்ஜியத்தை இந்தியாவில் ஸ்தாபித்த பாபர் என்பவர் அதிக கீர்த்தி வாய்ந்த போர்வீரர். அவர் அதிக நல்லகுணமும் தெய்வ பக்தியும் உடையவர். ஒரு சமயம் அவருடைய மூத்தபிள்ளையான ஹுமாயூன் என்பவர் அதிக நோயால் பீடிக்கப்பட்டுச் சாகும் தருவாயில் இருந்தார். அச்சமயம் பாபர் தன் மகனுடைய உயிருக்குப் பதிலாக தம் உயிரைக் கொடுப்பதற்குச் சித்தமாக இருப்பதாய்ச் சொல்லிக் கடவுளைத் தொழுதார். அதேமாதிரியாக சிலநாட்களில் ஹுமாயூன் குணமடைந்தார். ஆனால் பாபர் அதே வியாதியால் பீடிக்கப்பட்டு உயிர்துறந்தார். பாபர் இந்தியாவில் நான்கு வருஷங்கள் வரையில்தான் ஆண்டுவந்தார்.

முகலாய அரசர்களுக்குள் ஹுமாயூனுடைய பிள்ளையான அக்பர்தான் அதிக கீர்த்திவாய்ந்தவர். இவர் காலத்தில் முகலாய ராஜ்ஜியம் அதிகஉன்னத ஸ்திதியை அடைந்திருந்தது. அக்பர் தன்னுடைய ராஜ்ஜியத்தை அதிக சிறப்புடன் ஆண்டார். இவர் மத வித்யாசங்களைப் பாராட்டாமல் எல்லா மதங்களையும் ஒன்றாகப் பாவித்தார். இந்துக்களை ஆதரித்து அவர்களுடைய ஆதரவைப் பெற்றார். அவர்களுடைய நட்பைப் பெற ராஜபுத்திர ஸ்திரீகளை மணந்தார். ராஜா மான்சிங், ராஜா தோடர் மால், ராஜா பகவான் தாஸ் முதலிய ராஜ புத்திரர்களைத் தம்முடைய மந்திரிகளாக நியமித்துக் கொண்டார். இந்துக்களின் மீது போடப்பட்ட ஜஸியா என்ற வரியைத் தள்ளி விட்டார்.

ஜனங்களிடத்தில் அதிக அன்புடன் நடந்து கொண்டார். விவசாயிகளின் கஷ்டங்களை அறிந்து நிலவரியை ஒரு சரியான வழியில் திட்டப்படுத்தினர். மேலும் பசுக்களைக் கொல்லுதல், உடன் கட்டை ஏறுதல், நரபலி இடுதல் முதலிய கொடிய வழக்கங்களை நிறுத்த முயன்றார். அக்பர் காலத்தில் ஜனங்கள் அதிக சௌக்கியமாய் இருந்தார்கள்.

அக்பர் இந்து உடுப்பில்

அக்பர் முகம்மதிய உடுப்பில்

பிள்ளைகளே! அக்பர் அசோகரைப் போன்ற அதிக கீர்த்தி வாய்ந்த அரசர் என்பதில் சந்தேகமில்லை.

அக்பருக்குப் பிறகு வந்த ஜீஹாங்கீர், ஷாஜஹான் முதலிய முகலாய அரசர்கள் ராஜ்ஜியத்தின் கீர்த்தியை அதிகப்படுத்த முயன்றார்கள். அவர்கள் காலத்தில் நாட்டில் அமைதி இருந்தது. ஆனல் அவர்களுக்குப்

பிறகு வந்த ஔரங்கசீப் காலத்தில் முகலாய ராஜ்ஜியம் க்ஷீணதிசையை அடைய ஆரம்பித்தது.

பிள்ளைகளே! மொகலாய அரசர்களால் கட்டப் பட்ட பல அழகிய கட்டிடங்களை நாம் இப்பொழுதும் வட இந்தியாவில் பல இடங்களில் பார்க்கலாம். அவை கள் மொகலாய அரசர்களின் சிறப்பைக் காண்பிக் கின்றன.

வினுக்கள்

1. வட இந்தியாவில் முகலாய இராஜ்யம் எவரால், எப்போது, எவ்விதம் ஸ்தாபிக்கப்பட்டது?

2. பாபரின் குணுதிசயம் என்ன?

3. முகலாய அரசர்களில் அதிக கீர்த்திவாய்ந்தவர் எவர்? இவர் காலத்தில் முகலாய இராஜ்யம் அதிக உன்னதஸ்திதி அடை யக் காரணம் கூறுக?

4. அக்பரால் ஜனங்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் யாது? யாருடைய காலத்தில் முகலாய இராஜ்யம் க்ஷீணதசையை அடைந் தது?

---

19. முகலாய வம்சத்திய அரசிகள்

முகலாய வம்சத்தில் சில கீர்த்திவாய்ந்த அரசிகள் இருந்திருக்கின்றுர்கள். அவர்களில் நூர்ஜஹான், மும்தாஜ் என்ற இரண்டு அரசிகளின் பெயர்களை நீங் கள் கேள்விப்பட்டிருக்கலாம்.

நூர்ஜஹான் ஒரு பாரஸீகப் பெண். அவளுடைய தாய் தந்தையர்கள் பிழைப்பை நாடி இந்தியாவிற்கு

வந்தார்கள். அக்பரிடத்தில் நூர்ஜஹானுடைய தகப்பனுர் ஒரு சிறிய உத்யோகத்தில் அமர்ந்தார். அதிக அழகுவாய்ந்த நூர்ஜஹானே அக்பருடைய பிள்ளையான ஸலீம் என்பவர் பார்த்த பிறகு அவள்மீது காதல் கொண்டார். ஆனுல் அக்பர் நூர்ஜஹானே ஷெர் ஆப்கன்என்ற பெயருடைய ஒரு தளகர்த்தனுக்கு மணம் செய்வித்தார். சலீம் தான் அக்பருக்குப் பிறகு அரசனுக

நூர்ஜகான்

ஜஹாங்கீர்

வந்ததும் நூர்ஜஹானுடைய புருஷனேக் கொன்று விட்டு அவளேத் தன் அரண்மனேக்குக் கொண்டு வந்து வைத்தான். ஆனுல் நூர்ஜஹான் தன்புருஷன் இறந்ததை நினேத்துக்கொண்டு சில வருஷங்கள்வரையில் ஜஹாங்கீர் என்ற பெயர் வைத்துக்கொண்ட சலீமை மணக்க மறுத்தாள்.



தாஜ் மஹால்

6 வருஷங்களுக்குப் பிறகு ஜஹாங்கீர் தன் மேல் கொண்ட அன்பைப்பார்த்து அவனை மணந்து கொண்டாள். இதன் பிறகு நூர்ஜஹான் தானே ஜஹாங்கீரின் சார்பாக ராஜ்ஜியத்தை ஆளத் தொடங்கினுள். நூர் ஜஹான் அதிக திறமையுடன் அரசு புரிந்து வந்தாள். அவளுடைய திறமையால் குடிகளை அடக்கி ஆண்டு ராஜ்ஜியத்தில் அமைதியை நிலைநாட்டினுள்.

மும்தாஜ் என்பவள் நூர்ஜஹானின் சகோதரனுடைய புத்திரி. இவளும் நூர்ஜஹானைப்போலவே அதிக அழகு வாய்ந்தவள். ஜஹாங்கீரின் பிள்ளையான ஷாஜஹன் இவளை மணந்தார். இவள் 16 வருஷங்கள் வரையில் தன் கணவனுக்கு அரசு புரிவதில் அதிக ஒத்தாசையாக இருந்தாள். பிறகு ஒரு கொடிய நோய் ஒன்று கண்டு உயிர் துறந்தாள். சாகும் தருவாயில் தன் கணவனிடம் தன்னை என்றைக்கும் மறக்காமல் இருக்கும்படி வேண்டிக் கொண்டாள். ஆகையால் ஷாஜஹான் தன் மனைவியின்மேல் உள்ள அன்பின் அடையாளமாக ஆக்கிரா என்னும் நகரத்தில் தாஜ் மஹால் என்ற பெயருடைய ஒரு அழகிய கட்டிடத்தைக் கட்டினுர். அந்தக் கட்டிடம் அழகிய வெள்ளை சலவைக் கற்களால் கட்டப்பட்டது. உலகத்தில் இதைப்போன்ற அழகிய கட்டிடங்கள் வேறு எங்கும் கிடையாது.

பிள்ளைகளே! ஷாஜஹானுக்குத் தன் மனைவியின் மேல் உள்ள அன்பைப் பாருங்கள். அந்த அன்பை நாம் என்றைக்கும் மறக்க முடியாதபடி அவன் அழகிய

கட்டிடம் கட்டி தன்னையும் தன் மனைவியின் பெயரையும் உலகில் நிலைபெறச் செய்திருக்கிறான். அவ்விருவர் அன்பே அன்பு!

வினாக்கள்

1. நூர்ஜஹானை காதலித்த ஸலீம் அவளை அடைய என்ன செய்தான்? நூர்ஜஹான் பிறகு எப்படி ஸலீமை மணந்தாள்?

2. நூர்ஜஹானை மணந்த ஸலீம் இராஜ்யம் எவரால் ஆளப் பட்டது?

3. மும்தாஜ் என்பவள் யார்? இவள் யாரை மணந்தாள்? இவள் சாகும்தருவாயில் தான் கணவனை என்ன வேண்டிக்கொண்டாள்? ஷாஜஹான் தன் மனைவியின் ஞாபகார்த்தமாய் என்ன செய்தான்?

---

20. ஔரங்கசீபும் சிவாஜியும்

ஷாஜஹானுக்குப் பிறகு அவருடைய மூன்றாவது பிள்ளையான ஔரங்கசீப் அரசரானார். அவர்காலத்தில் முகலாயராஜ்ஜியம் அதிக விஸ்தீரணமடைந்திருந்தது. ஆனால் ஔரங்கசீப் இறப்பதற்கு முந்தியே முகலாய ராஜ்ஜியம் க்ஷீணதிசையை அடைய ஆரம்பித்துவிட்டது.

ஔரங்கசீப் அதிக திறமைவாய்ந்தவராக இருந்தாலும் அவர் இந்துக்களை அதிகமாக துவேஷித்தார். ஆகையால் அவர்மீது ஜனங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. இந்துக்களை அதிக குரூரமாக நடத்தினார். அவர்கள்மேல் அதிக வரிகளைப் போட்டார். மறுபடியும் ஜஸியா என்ற வரியை இந்துக்கள் கொடுக்கும்படி கட்

டாயப் படுத்தினர். இந்துக்களுக்கு அரசாங்கத்தில் உத்யோகங்களை ஒளரங்கசீப் கொடுக்கவில்லை. அவர்களுடைய கோவில்களை இடித்து அவர்களுக்குப் பல விதமான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தினர். ஆகையால் இந்துக்கள் ஒளரங்கசீபைத் துவேஷித்து அவருக்கு விரோதமாகப் பல கலஹங்களைச் செய்யத் தொடங்கினர்கள். அவ்வாருக அவரை எதிர்த்த ஹிந்துக்களில் ராஜபுத்திரர்களும் மஹாராஷ்டிரர்களும்தான் முக்கியமானவர்கள்.

ஒளரங்கசீப்

சிவாஜி

மஹாராஷ்டிரர்களை அவ்வாருக எதிர்த்து முகலாயர்களுடன் சண்டை செய்யும்படி தூண்டியவர் சிவாஜி என்பவர்தான். அவர் பான்சிலே வமிசத்தைச் சேர்ந்த ஷாஜி என்பவரின் புத்திரனுக 1627-ம் வருஷத்தில் பிறந்தார். ஷாஜி பீஜப்பூர் சுல்தானின் கீழ்

ஒரு சேனைத் தலைவராக இருந்தார். சிவாஜியின் தாயா ரான ஜீஜீபாய் என்பவள் அதிக அறிவும் தெய்வ பக்தியும் உடையவள். அவள் தன் பிள்ளைக்கு ராமா யணம் மஹாபாரதம் முதலியபுராணக் கதைகளைச் சொல்லி அவரை இந்து மதத்தில் அதிகப் பற்று உள்ளவராகவும் செய்தாள். இதைத்தவிர சிவாஜியின் குருவான துகாராம் ராமதாஸ் முதலியவர்கள் சிவாஜியை இந்து மதத்தைக் காப்பாற்றுமாறு உப தேசித்தார்கள்.

சிவாஜி சிறுவயதிலேயே போர் செய்யும் முறை களைக் கற்றுக்கொண்டார். அவருடைய 20-வதுவயதில் ஒரு சிறிய சேனையின் உதவியால் பல கோட்டைகளைப் பிடித்துக்கொண்டார். சிவாஜியின் ஜெயங்களைக் கண்ட பீஜப்பூர் சுல்தான் அவரை அடக்க எண்ணி அப்சல் கான் என்ற போர்வீரனை அனுப்பினுர். அவருடன் எதிர்த்துச் சண்டைசெய்ய முடியாது என்று உணர்ந்த சிவாஜி அப்சல்கானைத் தன்னைத் தனியாக வந்து பார்க் கும்படி வேண்டிக் கொண்டார். அப்சல்கான் சிவா ஜியை நம்பி அவ்வாறு தனியாக வந்தசமயத்தில் சிவாஜி யால் கொல்லப்பட்டார். இதைக் கேள்விப்பட்ட பீஜப் பூர் சுல்தானின் துருப்புக்கள் ஓடிவிட்டன.

இதன்பிறகு சிவாஜி முகலாய ராஜ்ஜியத்தின்மீது படையெடுக்க ஆரம்பித்தார். ஔரங்கசீப் சிவாஜியை அடக்க எண்ணி ஷெயிஸ்டகான் என்ற தளகர்த்தனை அனுப்பினுர். அவன் பூனுவில் தங்கி இருக்கும்

சமயத்தில் சிவாஜி தன்னுடைய ஆட்களுடன் மாறு வேடம்பூண்டு ஷெயிஸ்டகான் தங்கி இருக்கும் இடத்திற்கு இரவில் வந்து அவரைத் திடீரென்று எதிர்த்தார். எதிர்பாரர்த சமயத்தில் தாக்கப்பட்ட ஷெயிஸ்டகான் ஜன்னல் வழியாகக் குதித்துத் தப்பி ஓடினுன். முகலாய துருப்புகளும் அவரைப்பின்பற்றி ஓடி விட்டன. இதன் பிறகு ஔரங்கசீப் சிவாஜியைத் தன் சேனையில் தளகர்த்தராக நியமிப்பதாகச் சொல்லி அனுப்பினுர். அதை நம்பிய சிவாஜி டில்லிக்குச் சென்ருர். அப்பொழுது ஔரங்கசீப் அவரைச் சிறையிலிட்டார். ஆனுல் சிவாஜி தந்திரமாகச் சிறையிலிருந்து ஒரு பழக்கூடையில் ஒளிந்துகொண்டு வெளியே வந்து தன் ஊருக்கு வந்துவிட்டான்.

இவ்வாருக முகலாயர் கையில் இருந்து தப்பிய சிவாஜி புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட மஹாராஷ்டிர ராஜ்ஜியத்திற்கு மன்னராக முடி சூட்டிக்கொண்டான். அதன் பிறகு சிவாஜி சுமார் நான்கு வருஷம் வரையில் அரசு புரிந்து வந்தார்.

சிவாஜி தன் நாட்டை அதிக திறமையுடன் அரசு புரிந்துவந்தார். ஜனங்களைப் பக்ஷபாதமில்லாமல் ஆண்டு வந்தார். மற்ற மதத்தைச் சேர்ந்தவர்களிடத்தில் அன்பு பாராட்டிவந்தார். சிவாஜி முகம்மதியர்களின் மதத்தை வெறுக்கவில்லை. அவர்களுடைய கோவில்களை இடிப்பதில்லை. முகம்மதியர்களுடைய வேத புஸ்தகமாகிய கொரானுக்கு மரியாதை செய்வார்.

சண்டையில் சிறைபட்ட ஸ்திரீ குழந்தைகளை அன்புட னும் மரியாதையுடனும் நடத்தி வந்தார். இவ்வாறு சிறப்பாக ஆண்டு வந்த சிவாஜி 1680-ம்வருஷத்தில் உயிர் துறந்தார்.

பிள்ளைகளே! சிவாஜி மன்னரை இந்துக்கள் இன் றைக்கும் கொண்டாடி வருகிறார்கள். அவர் இந்துமதம் அழியாதபடி காப்பாற்றி வந்ததை இந்துக்கள் என்றைக் கும் மறக்கமாட்டார்கள். அவரால் ஏற்படுத்தப்பட்ட மஹாராஷ்டிர ராஜ்ஜியம் அவருக்குப் பிறகு முன் னேற்ற மடைந்தது.

வினாக்கள்

1. ஔரங்கசீப் இந்துக்களிடம் எவ்விதம் நடந்தார்? அவ ரால் ஏற்பட்ட இம்சைகள் எவை? இதன் பயனாக இந்துக்கள் என்ன செய்தார்கள் என்று கூறுக?

2. சிவாஜியைப்பற்றி தெரிந்தவரை கூறுக? பீஜப்பூர் சுல்தான் சிவாஜியின் மீது பொறாமை கொண்டு என்னசெய்தான்? அப்சல் கானும் அவனது துருப்புகளும் என்ன வாயிற்று?

3. ஔரங்கசீப் சிவாஜியை எவ்விதம் கைதிசெய்தான்? சிவாஜி அதிலிருந்து எவ்விதம் தப்பினான்? தப்பியபிறகு எதற்கு மன்ன ரானார்? சிவாஜி முகமதியர்களிடம் எவ்விதம் நடந்து வந்தார்?

---

21. பிற்காலத்திய தென் இந்திய ராஜ்ஜியம்

பிள்ளைகளே! விஜய நகர அரசர்களைப் பற்றி நாம் ஏற்கனவே படித்திருக்கிறோம். அவர்கள் தங்களுக்குத் தெற்கு பிரதேசத்தில் சில பிரதிநிதிகளை ஏற்படுத்தி யிருந்தார்கள். ஆனால் விஜயநகர ராஜ்ஜியம் சீர்குலைந்த

பிறகு அந்தச் சிற்றரசர்கள் சுயேச்சை மன்னர்களாகி விட்டார்கள். அப்பேர்ப்பட்ட அரசர்களில் மதுரையில் ஆண்டு வந்த நாயக்கர் அரசர்களும்,செஞ்சியில் ஆண்டு வந்த ராஜபுத்திர் அரசர்களும் முக்கியமானவர்கள்.

மதுரையில் 17-வது நூற்றுண்டில் ஆண்டு வந்த நாயக்கர் அரசர்கள் வடக்கே திருச்சிராப்பள்ளி முதல் தெற்கே கன்யாகுமரி முனைவரையில் உள்ள நாட்டை ஆண்டு வந்தார்கள். அவர்களில் திருமலை நாயக்கரும் ராணிமங்கம்மாளும் முக்கியமானவர்கள்.

திருமலை நாயக்கர் சுமார் முன்னூறு வருஷங்களுக்கு முன்பு மதுரையில் அரசு புரிந்துவந்தார். அவர் திருவாங்கூர் தஞ்சாவூர் முதலிய ராஜ்ஜியங்களை ஜெயித்து அந்த அரசர்களிடமிருந்து கப்பங்கள் பெற்று வந்தார். திருமலை நாய்க்கர் தன் ராஜ்ஜியத்தை அதிக சிறப்புடன் ஆண்டுவந்தார். மதுரையிலுள்ள மீனுக்ஷி சுந்தரேசுவரர் ஆலயத்தைப் புதுப்பித்தார். இதைத்தவிர மதுரையில் அழகு வாய்ந்த அரண்மனையைக் கட்டினுர். அதற்குத் திருமலை நாய்க்கர் மஹால் என்று பெயர்.

திருமலை நாயக்கருக்குப்பிறகு ஆண்டு வந்த நாயக்கர் வமிசத்தரசர்களில் ராணிமங்கம்மாள் அதிக கீர்த்தி பெற்றவள். அவள் திருமலை நாயக்கருடைய பேரனின் மனைவி. மங்கம்மாளின் கணவனும் பிள்ளையும் இறந்த பிறகு தன்னுடைய சிறுவயதுள்ள பேரன் சார்பாக நாட்டை ஆண்டு வத்தாள். மங்கம்மாள் தன்

குடிகளுக்குப் பல சௌகர்யங்களைச் செய்தாள். அநேக சாலைகளைப் போட்டு அவைகளின் இருபுறங்களிலும் மரங்களை வைக்கும்படி உத்தரவிட்டாள்.



திருமலை நாயக்கர் மஹால் மதுரை

இதைத்தவிர பல இடங்களிலும் கிணறுகள் குளங்கள் முதலியவைகளை வெட்டுவித்தாள். பல கோவில்களுக்

குத் திருப்பணிகள் செய்தாள். பல இடங்களில் சத்திரங்களை ஏற்படுத்தினாள். அவைகளில் சிலவற்றை நாம் இப்பொழுதும் பார்க்கலாம். இதைத் தவிர திருச்சிராப்பள்ளியில் தர்பார் நடத்துவதற்காக ஒரு அழகிய கட்டிடத்தைக் கட்டினாள். அந்தக் கட்டிடத்தை இப்பொழுது நகர மண்டபமாக பிரயோஜனப்படுத்திக் கொண்டார்கள். மங்கம்மாள் இறந்த சில காலத்திற்குப் பிறகு நாயக்கர்களுடைய ராஜ்ஜியம் முகம்மதியர்களால் ஜெயிக்கப்பட்டது.



திருமலை நாயக்கர்

மதுரை நாயக்கர் அரசர்களைப் போலவே 18-வது நூற்றாண்டில் தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள செஞ்சி என்ற நகரத்தில் சில ராஜ புத்திர அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களில் தரன்சிங் என்பவர் முக்கியமானவர். அவர் டில்லியில் ஆண்டுவந்த நவாபால் சிறையிலடைக்கப் பட்டார். அவருக்கு ஜெயசிங் என்ற பிள்ளை ஒருவர் இருந்தார். ஜெயசிங் அதிக பராக்கிரமசாலியானவர். குதிரை சவாரி செய்வதில் அதிக தேர்ச்சி பெற்றவர். தன் தகப்பனாரை மீட்க டில்லிக்குச் சென்றார். அங்கே நவாபால் அடக்கமுடியாத ஒரு குதிரையின்மீது ஏறி அதிக

திறமையுடன் சவாரி செய்தார். அதனால் சந்தோஷ மடைந்த ஷா ஆலம் என்ற நவாப் தரன்சிங் என்ப


செஞ்சி கோட்டை

வரை விடுதலை செய்து அவருடைய பிள்ளைக்கு ராஜா என்ற பட்டத்தை அளித்தார். ராஜாதேசிங் தன் தகப்பனுருக்குப்பிறகு செஞ்சியில் அதிகதிறமை யுடன் ஆண்டு வந்தார். இவருடைய கீர்த்தியைக் கண்டு பொறாமை அடைந்த ஆற்காட்டு நவாப் இவருடன் சண்டைசெய் தார். அந்தச் சண்டையில் ஜெயசிங் ஜெய மடைந்தபோதிலும் அவருடைய விரோதிகளின் சூழ்ச்சியால் கொல்லப்பட்டார். ஜெயசிங் இறந்த பிறகு செஞ்சி ராஜ்ஜியம் அழிந்து போயிற்று. செஞ்சிக்கோட்டையின் இடிந்துபோன பாகங்களை நாம் இன்றைக்கும் பார்க்கலாம்.

பிள்ளைகளே! நாம் இன்றைக்கும் ராணி மங்கம்மாள் ராஜாஜெயசிங் அவர்களைப்பற்றி கேள்விப் படுகிறோம். ராஜா ஜெயசிங் என்பவரைப் பற்றிய பாட்டுகளை நீங்கள் அடிக்கடி கேட்டிருப்பீர்கள். ஏனென்றால் அவர் அதிக கீர்த்திவாய்ந்த போர்வீரர்.

வினுக்கள்

1. விஜய நகர இராஜ்யம் சீர்குலேந்த பிறகு அதன் சிற்றரசர்கள் என்ன செய்தார்கள் ?

2. நாயக்கர் அரசர்கள் எந்தெந்த நாடுகளே ஆண்டுவந்தார்கள் ? இவ் அரசர்களில் முக்கியமானவர் யார் ? அவர் எந்தெந்த நாடுகளே ஜயித்தனர் ? அவரால் ஏற்பட்ட நன்மைகள் யாது ? மங்கம்மாளால் குடிகளுக்கு ஏற்பட்ட நன்மையைக் கூறுக ?

3. இராஜபுத்திர அரசர்கள் எந்த நாடுகளே ஆண்டுவந்தனர் ? ஜெயசிங் சிறையிலிருந்த தகப்பனே எவ்விதம் மீட்டார் ? ஆற்காட்டு நவாப் ராஜாதேசிங்கிடம் பொருமைகொண்டு என்ன செய்தான் ?

---

22. ஐரோப்பிய வியாபாரிகள்

பிள்ளேகளே! முன் காலத்தில் ஐரோப்பியர்கள் நம் நாட்டிலிருந்து மிளகு, ஏலம், பட்டு ஆடைகள் முதலிய விலே உயர்ந்த சாமான்களே வாங்கிக்கொண்டு போவதற்காக நம் நாட்டிற்கு வந்தார்கள். அப்பொழுது அவர்கள் நம் நாட்டிற்கு தரைமார்க்கமாக வந்தார்கள். பிறகு 15-வது நூற்றுண்டில் இந்தியாவிற்கு வர ஒரு கடல் மார்க்கத்தைக் கண்டு பிடிப்பதற்காக பல ஐரோப்பியர்கள் அதிக முயற்சி எடுத்துக்கொண்டார்கள். அவ்வாறுன கடல் மார்க்கத்தை முதலில் கண்டு பிடித்தவர் வாஸ்கோடிகாமா என்பவர்தான்.

வாஸ்கோடிகாமா என்பவர் போர்ச்சுகல் தேசத்தைச் சேர்ந்த ஒரு மாலுமி. அவர் கள்ளிக்கோட்டையில்

வந்து இறங்கியதும் தன் தேசத்தைச் சேர்ந்த வியா பாரிகள் இந்தியாவில் வியாபாரம் செய்யும் உரிமையைக் கள்ளிக்கோட்டையில் ஆளும் அரசரிடம் பெற்ருர். அதற்குப் பிறகு போர்ச்சுகல் தேசத்தார்கள் நம் தேசத்தின் மேற்குக் கரையோரத்தில் பல வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தினுர்கள். அவைகளில் கோவா முக்கியமானது. போர்ச்சுகல் தேசத்தார்கள் இந்தியாவில் தங்கள் இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க முயன்ருர்கள்.

வாஸ்கோடிகாமா

சில வருஷங்களுக்குப் பிறகு டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வியாபாரம் செய்ய வந்தார்கள். ஆனுல் அவர்கள் மற்றும் கிழக்கிலுள்ள தேசத்திற்குச் சென்று வியாபாரம் செய்யத் தொடங்கினுர்கள். அவர்களுக்குப் பிறகு பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்தார்கள். அவர்கள் கிழக்குக் கரையோரத்தில் சில வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தினுர்கள். அவைகளில் புதுச்சேரி முக்கியமானது. கடைசியாக இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்கள் இப்பொழுது நம்மை ஆளும் ஆங்கிலேயரே.

சுமார் 300 வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் எலிஜபெத் ராணியார் ஆளும் சமயத்தில் பல ஆங்கிலேய வியாபாரிகள் இந்தியாவுடன் வியாபாரம் செய்வதற்காகக் கிழக்கு இந்தியா கம்பெனி என்ற பெய

ருடைய. ஒரு வியாபார சங்கத்தை ஏற்படுத்தினார்கள். அந்தக் கம்பெனியைச் சேர்ந்த ஆங்கிலேய வியாபாரிகள் இந்தியாவின் கிழக்குக் கரையோரத்தில் சில வியாபாரஸ்தலங்களை ஏற்படுத்தினார்கள். அவைகளில் முதலில் மசூலிப்பட்டினம் முக்கியமான இடமாக இருந்தது. பிறகு அதற்குத் தெற்கே உள்ள ஒரு இடத்தைச் சந்திரகிரி அரசனுக்குக் கீழ்பட்ட சென்னப்பன் என்ற ஒரு சிற்றரசனிடமிருந்து வாங்கினார்கள். அந்தப் புதிய இடத்திற்குச் சென்னப்பட்டினம் என்று பெயர் வந்தது. ஆங்கிலேய கம்பெனியார்கள் அந்த இடத்தில் செயின்ட் ஜார்ஜ் என்ற பெயருடைய ஒரு கோட்டையைக் கட்டினார்கள். சென்னப்பட்டினம் நாளடைவில் ஒரு பெரிய நகரமாயிற்று.

முதல் முதலில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் வியாபார விஷயத்தில் போட்டி ஏற்பட்டது. பிரெஞ்சுக்காரர்களுக்குத் தலைவராக இருந்த டூப்ளே என்பவர் தென் இந்தியாவில் ஆண்டுவந்த சுதேச மன்னர்களின் சண்டைகளில் தலையிட்டு அதன் மூலமாக இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் ஏகாதிபத்யத்தை ஏற்படுத்த முயன்றார். ஆனால் ஆங்கிலேயர்கள் அவருக்கு இடையூறாக இருந்தார்கள். ஆகையால் ஆங்கிலே

டூப்ளே

யர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் பல சண்டைகள் ஏற்பட்டன. அவைகளில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றதால் அவர்களுடைய செல்வாக்குத் தென் இந்தியாவில் அதிகமாயிற்று.

பிள்ளைகளே! முதலில் ஐரோப்பியர்கள் நம் நாட்டிற்கு வியாபாரம் செய்வதற்காக வந்தார்கள். பிறகு அவர்கள் போர்களில் தலையிடவேண்டியிருந்தது அவர்களுடைய திறமையால் நம் நாட்டிற்கு கடைசியாக அதிபதிகளாகிவிட்டார்கள்.

வினாக்கள்

1. முன் காலத்தில் ஐரோப்பியர்கள் நம்நாட்டிற்கு எதற்காக வந்தார்கள்? எந்தமார்க்கமாக வந்தார்கள் என்று கூறுக?

2. கடல் மார்க்கத்தை முதலில் கண்டு பிடித்தவர் யார்? அவர் வந்து இரங்கிய உடன் என்ன செய்தார்?

3. கிழக்கு இந்திய கம்பெனி எப்போது, யாரால், எதற்கு ஏற்பட்டது என்பதைக் கூறுக?

4. ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் பல சண்டைகள் ஏற்பட்ட காரணம் என்ன? இச்சண்டைகளில் வெற்றியடைந்தது யார் என்று கூறுக?

---

23. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் ஆரம்பம்

முதல் முதலில் தென் இந்தியாவில்தான் ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரித்தது. ஆங்கிலேயரின் அதிகாரத்தை இந்தியாவில் நிலை நாட்டியவர் ராபர்ட் கிளைவ் என்பவர்தான்.

ராபர்ட் கிளைவ் இங்கிலாந்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் அவர் சிறு வயதில் துஷ்டராக இருந்தார். அவர் சிறு வயதிலேயே கிழக்கு இந்திய கம்பெனியின் கீழ் ஒரு குமாஸ்தா வேலையில் அமர்ந்தார். பிறகு அந்த வேலையை வெறுத்தவராய் ராணுவத்தில் சேர்ந்தார். அப்பொழுது பிரெஞ்சுக்காரர்களுக்கு டூப்ளே என்பவர் தலைவ்ராக இருந்தார். அவர் ஒரு பெரும் சேனையைத் தயார் செய்து கொண்டு ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்டி விட வேண்டுமென்று உத்தேசித்தார். டூப்ளே அதிகதிறமை வாய்ந்தவர்.

ராபர்ட் கிளைவ்

அப்பொழுது தென் இந்தியாவில் இரண்டு முகம்மதிய அரசர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் சந்தாசாஹிப் என்பவர் அவர் ஆற்காட்டில் இருந்து ஆண்டு வந்தார். மற்றொருவரான முகம்மத் அலி என்பவர் திருச்சிராப்பள்ளியில் இருந்தார். அவர்கள் இருவரும் கர்நாடகத்திற்கு நவாபாக வேண்டுமென்ற எண்ணத்துடன் சண்டை செய்தார்கள். அப்போது டூப்ளே சந்தாசாஹிபுடன் சேர்ந்து கொண்டு முகம்மத் அலியை தோற்கடிக்க உத்தேசித்து திருச்சிராப்பள்ளியைப் முற்றுகையிட்டார். அந்தச் சமயத்தில் முகம்மத் அலி ஆங்கிலேயரின் உதவியை நாடினர்.

ஆகையால் ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரருடன் போர் தொடுக்க நிச்சயித்தார்கள்.

அப்பொழுது ராணுவத்தில் ஒரு சிறிய தளகர்த்த ராக இருந்த ராபர்ட் கிளைவ் சென்னையிலிருந்த ஆங்கி லேய கவர்னருக்கு ஒரு நல்ல யோசனையைச் சொன் னார். முகம்மத் அலியைக் காப் பாற்ற திருச்சிராப்பள்ளியை முற் றுகையிட வேண்டுமென்று கிளைவ் வற்புறுத்தினார். ஆங்கிலேய கவர் னர் அவ்வாறு செய்ய நிச்சயித்து ராபர்ட் கிளைவையே ஒரு சிறிய சேனையுடன் ஆற்காட்டிற்கு அனு ப்பினார். ஆற்காட்டில் சந்தாசாஹி பின் படைகள் இல்லாததால் கிளைவ் அந்த நகரத்தைச் சுலப மாகப் பிடித்துவிட்டார். இந்த செய்தியைக் கேட்ட சந்தாசாஹிப் தன் பிள்ளையான ராஜாசாஹிப் என் பவனை ஆற்காட்டிற்கு ஒரு பெரும் சேனையுடன் அனுப் பினார். ஆனால் அவன் கிளைவின் சேனைகளால் தோற் கடிக்கப்பட்டு ஓடிவிட்டான். பிறகு கிளைவ் தன் படை களுடன் திருச்சிராப்பள்ளிக்கு வந்து சந்தாசாஹிபை யும் பிரெஞ்சுக்காரர்களையும் தோற்கடித்துவிட்டு முகம்மத் அலியை விடுவித்தார். இவ்வாறாக ஆங்கிலேயர்களின் உதவியால் முகம்மத் அலி கர்நாடகத்திற்கு நவாபாக ஆனார். கிளைவ் இவ்வாறாக ஆங்கிலேய கம்பெனியா

முஹம்மத் அலி

ரின் ஆதிக்கியத்தைத் தென் இந்தியாவில் முதலில் நிலை நாட்டினார்.

பிறகு வங்காளத்திலும் கிளைவ் ஆங்கிலேயரின் ஆதிக்கியத்தை ஏற்படுத்தினார். அப்பொழுது சுராஜ்-உத்-தௌவுலா என்பவர் வங்காளத்திற்கு நவாபாக இருந்தான். அவன் கல்கத்தாவில் உள்ள ஆங்கிலேயரின் வியாபார ஸ்தலத்தைப் பிடித்துக்கொண்டான். ஆகையால் கிளைவ் ஒரு பெரிய சேனையுடன் வங்காள நவாபைப் பிளாஸி என்ற இடத்தில் 1757-ம் வருஷத்தில் எதிர்த்துச் சண்டை செய்தார். அச் சண்டையில்

சுராஜ் உத்தௌவுலா

மீர்ஜாபர்

ஆங்கிலேயர்கள் ஜெயித்தார்கள். அதன்பிறகு ஆங்கிலேயர்கள் மீர்ஜாபர் என்பவரை வங்காளத்தில் நவாபாக நியமித்தார்கள். அவர் ஆங்கிலேயர் சொல்லிய படி நாட்டை ஆண்டுவந்தார். இவ்வாறாக, கிளைவினால்

வங்காளத்திலும் ஆங்கிலேயரின் அதிகாரம் ஏற்படுத்தப் பட்டது.

பிள்ளைகளே! ராபர்ட் கிளைவின் திறமையால்தான் ஆங்கிலேயர்கள் முதல் முதலில் தங்கள் அதிகாரத்தை இந்தியாவில் ஏற்படுத்தினுர்கள். ஆகையால் அவர்கள் கிளைவின் பெயரை அதிகமாக போற்றுகிருர்கள்.

வினுக்கள்

1. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியை நிலைநாட்டியவர் யார்? அவரைப்பற்றி உனக்கு தெரிந்தவரை கூறுக?

2. டூப்ளே எந்த நோக்கத்துடன் சந்தாசாகேப்புக்கு உதவி செய்தார்? முகமத் அலி யாருடைய உதவியை நாடினர்? இதன் முடிவு என்ன?

3. ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை தென் இந்தியாவில் முதலில் எவ்விதம் கிளைவ் நிலைநாட்டினுர்?

---

24. கிழக்கு இந்திய கம்பேனியாரின் ஆட்சி

ராபர்ட் கிளைவ் ஏற்படுத்திய ஆங்கிலேய இராஜ்ஜியத்தைக் கிழக்கு இந்திய கம்பெனியாரே 1857-ம் வருஷம் வரையில் ஆண்டு வந்தார்கள். கம்பெனியாரால் நியமிக்கப்பட்ட பல ஆங்கிலேய பிரமுகர்கள் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட ஆங்கிலேயரின் இராஜ்யத்தைஅதிக திறமையுடன் ஆண்டுவந்தார்கள். அவர்களில் வாரன் ஹேஸ்டிங்ஸ், வெல்லஸ்லி பிரபு, ஹேஸ்டிங்ஸ் பிரபு, டெல்ஹௌஸி பிரபு முதலியவர்கள் முக்கியமானவர்கள்.

கம்பெனியாரால் முதலில் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டவர் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர் தான். அவர் அதிக திறமை வாய்ந்தவர். அவர் ஆங்கிலேயர்களின் விரோதிகளைத் தோற்கடித்துக் கம்பெனியாரின் அதிகாரத்தை வலுப்படுத்தினர்.

வாரன் ஹேஸ்டிங்ஸ்

வெல்லஸ்லி பிரபு

அவருக்குப் பிறகு வந்தவர்களில் வெல்லஸ்லி பிரபு என்பவர் அதிக கீர்த்தி வாய்ந்தவர். இவர் காலத்தில் கம்பெனியாரின் இராஜ்யம் அதிகப்படுத்தப்பட்டது. அவர் மைசூரில் ஆண்டுவந்த திப்பு சுல்தானை தோற்கடித்தார். அவர் மஹாராஷ்டிரர்களையும் பல இடங்களில் தோற்கடித்தார். ஆங்கிலேய அரசாட்சியை இந்தியாவில் நிலை நாட்டியவர்களில் வெல்லஸ்லி பிரபு முக்கியமானவர் என்பதில் சந்தேகமில்லை.

பிறகு வந்த கவர்னர் ஜெனரல்களில் ஹேஸ்டிங்ஸ் பிரபு என்பவர் அதிக திறமை வாய்ந்தவர். அவர்

மஹாராஷ்டிரர்களுடன் போர் புரிந்து பம்பாய் இராஜ தானியின் பெரும்பாலான பாகத்தைக் கம்பெனியாரின் ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்.

பிறகு வந்த டெல்ஹௌஸி பிரபுவின் காலத்தில் இந்தியாவில் ஆங்கிலேயரின் கீர்த்தி அதிகப்படுத்தப் பட்டது. அவர் சீக்கியர்களுடன் போர் புரிந்து பஞ்சாப் மாகாணத்தைக் கம்பெனியாரின் கீழ் கொண்டு வந்தார். இவர் காலத்தில் சந்ததியில்லாமல் இறந்து போன சுதேச மன்னர்களின் இராஜ்யங்கள் பல கம்பெனியாருடைய இராஜ்யத்துடன் சேர்க்கப் பட்டன.

ஹேஸ்டிங்ஸ் பிரபு

டெல்ஹௌஸி பிரபு

டெல்ஹௌஸி பிரபு ஜனங்களின் சௌகர்யத்தை முன்னிட்டுப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அதனால் அவைகளின் உண்மைகளை அறியாத இந்தியர்கள் ஆங்கிலேயரிடம் அதிக வெறுப்புக் கொண்டார்கள்.

இவருக்குப் பிறகு வந்த கானிங் பிரபுவின் காலத்தில்தான் கம்பெனியாரின் ஆட்சி முடிவடைந்தது. மாக்ஷிமை தங்கிய விக்டோரியா அரசியின் ஆட்சியின் கீழ்வந்தது. பிள்ளைகளே! இந்தியாவிற்கு வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் தங்களுடைய திறமையால் நம் நாட்டிற்கு அதிபதியானார்கள். நாம் அவர்களுடைய திறமையும் விடாமுயற்சியையும் மெச்ச வேண்டும்.

வினாக்கள்

1. இந்தியாவில் கிளைவ் ஏற்படுத்திய ஆங்கில இராஜ்யங்களை கிழக்கு இந்தியா கம்பெனியார் எந்த வருஷம்வரை ஆண்டு வந்தனர்?

2. கிழக்கு இந்திய கம்பெனியாரால் அனுப்பப்பட்ட கவர்னர் ஜனரல்களில்,

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் என்ன செய்தார்?

2. வெல்லஸ்லிபிரபு காலத்தில் ஏற்பட்டதென்ன?

3. ஹேஸ்டிங்ஸ்பிரபு காலத்தில் ஏற்பட்ட நன்மை யாது?

4. டெல்ஹௌசிபிரபு காலத்தில் ஆங்கிலேயரின் கீர்த்தி எவ்விதம் அதிகப்படுத்தப்பட்டது?

25. சீக்கியர்கள்

பஞ்சாப் நாட்டில் மஹாராஷ்டிரர்களைப் போன்ற அதிக தைரியம் வாய்ந்த சீக்கியர் என்ற ஒரு ஜாதியார் இருக்கின்றார்கள். அவர்களுடைய மதமான சீக்கிய மதத்தைக் குருநானக் என்பவர்தான் ஏற்படுத்தினர். சீக்கியர்கள் அதிக தைரியம்வாய்ந்த போர்வீரர்கள். தங்களுடைய மதத்தில் அதிகப் பற்று உடையவர்கள். ஆங்கிலேயர் ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்தும் பொழுது பஞ்சாப் மாஹாணம் முழுவதும் சீக்கியர்கள் கையில்தான் இருந்தது.

சீக்கிய மன்னர்களுக்குள் ரஞ்சித்சிங் என்பவர் அதிக திறமைவாய்ந்தவர். அவர் ஒரு சிறந்த போர் வீரர். தன்னுடைய திறமையால் சீக்கியர்களை ஒன்று படுத்தினர். தன் ராஜ்ஜியத்தை அதிக திறமை யுடன் ஆண்டுவந்தார். அவர் ஆங்கிலேயர்களுடன் அதிக நட்புக் கொண்டிருந்தார்.

ரஞ்சித்சிங்

ரஞ்சித்சிங் இறந்தபிறகு சீக்கியர்களுக்குள் பல கக்ஷிகள் ஏற்பட்டன. ஆகையால் ஆங்கிலேயர்கள் பஞ்சாப் விஷயங்களில் தலையிடவேண்டி இருந்தது. ஆங்கிலேயர்களுக்கும் சீக்கியர்களுக்கும் போர்கள் ஏற்

பட்டன. ஆனால் ஆங்கிலேயர்கள் சீக்கியர்களைத் தோற்கடித்துப் பஞ்சாப் மாஹாணத்தைத் தங்கள் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார்கள்.

இப்பொழுது சீக்கியர்கள் அதிகமாக பஞ்சாப் மாஹாணத்தில்தான் இருக்கிறார்கள். அவர்கள் அதிக ராஜ விசுவாசமுள்ள போர்வீரர்கள்.

வினாக்கள்

1. சீக்கிய மதத்தை ஏற்படுத்தினவர் யார்? அவர்கள் எந்த மாகாணத்தை ஆண்டுவந்தனர்? இதில் கீர்த்தி வாய்ந்த அரசரின் பெயர் என்ன?

2. ரஞ்சித்சிங் இறந்த பிறகு என்ன ஏற்பட்டது?

---

26. சிப்பாய் கலகமும், விக்டோரியா மஹாராணியும்

பிள்ளைகளே! டெல்ஹௌஸி பிரபுவின்காலத்தில் பல சுதேசமன்னர்கள் ராஜ்ஜியங்களை இழந்ததைப்பற்றி கேள்விப்பட்டோம். அவர்களில் சிலர் தங்கள் ராஜ்ஜியங்களைத் திருப்பி அடையும்பொருட்டு ஆங்கிலேயரின் ஆட்சிக்கு விரோதமாக கலகம் செய்தார்கள். அவர்களோடு தங்கள் உத்தியோகங்களை இழந்த சில சிப்பாய்களும் 'சேர்ந்துகொண்டு கலகம் செய்யத் தொடங்கினார்கள். ஆகையால் இந்தக் கலகத்திற்குச் சிப்பாய் கலகம் என்று பெயர் வந்தது.

இந்தச் சிப்பாய்கலகம் ஏற்படுவதற்கு வேறு பல காரணங்களும் இருந்தன. பல இந்தியர்கள் டெல்ஹௌஸிபிரபு செய்த சீர்திருத்தங்களைக் கண்டு தவறான

அபிப்பிராயங்களைக் கொண்டார்கள். ஆங்கிலேய துரைத்தனத்தார் தங்கள் ஜாதிமதங்களை மாற்றுவதற்காகத்தான் இந்த சீர்த்திருத்தங்களை ஏற்படுத்துகிறார்கள் என்று நினைத்துக் கலகம் செய்தவர்களுடன் பல ஹிந்துக்களும் முகம்மதியர்களும் சேர்ந்துகொண்டார்கள். மேலும், மாடு பன்றிகளின் கொழுப்பினால் பூசப்பட்ட தோட்டாக்களை பிரயோகப்படுத்துவதால் தங்கள் மதங்களைத் தாங்கள் இழக்க நேரிடும் என்று பல சிப்பாய்கள் அஞ்சினார்கள். இவ்வாறாக ஆங்கிலேயர்களை வெறுத்த இந்தியர்களைக் கலகம் செய்யும்படி தூண்டியவர் நானாசாஹிப் என்ற பெயருடைய மஹாராஷ்டிரர்தான்.

அதிக மன வருத்தம் அடைந்த சிப்பாய்கள் திடீரென்று கலகம் செய்தார்கள். பல ஆங்கிலேயர்களையும் கொன்றார்கள். மீரட், டில்லி கான்பூர் முதலிய இடங்களில் சிப்பாய்கள் சிறைச்சாலைகளை உடைத்துப் பல கைதிகளை விடுவித்தார்கள். இந்தக் கலகம் நாட்டில் பல இடங்களில் பரவும் போல் இருந்தது. ஆனால் துரைத்தனத்தார் கலகத்தைத் திறமையுடன் அடக்கிவிட்டார்கள். இந்தச் சமயத்தில் துரைத்தனத்தாருக்குப் பல சுதேச மன்னர்களும் பெரும்பாலான ஜனங்களும் ஒத்தாசையாக இருந்தார்கள்.

சிப்பாய் கலகம் நடந்த பொழுது இங்கிலாந்தில் விக்டோரியா மஹாராணியார் ஆண்டு வந்தார். கலகம் முடிந்த பிறகு இந்தியாவை விக்டோரியா அரசியே

ஆளவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டது. பிறகு நம் நாட்டிற்கு விக்டோரியா மஹா ராணியார் அரசியார் ஆனார். அவருக்கு முதலாவது இராஜப் பிரதிநிதியாக

விக்டோரியா மஹாராணி

கானிங் பிரபு

நியமிக்கப்பட்ட கானிங் பிரபு ஜனங்களிடத்தில் அதிக அன்பைக் காட்டி அவர்களுக்கு அதிக திருப்தியை அளித்தார்.

பிள்ளைகளே! விக்டோரியா மஹாராணியார் அதிக கீர்த்திவாய்ந்த அரசியாக விளங்கினார். அவர் காலத்தில் ஜனங்களுக்குப் பல சௌகர்யங்கள் செய்யப் பட்டன. ஜனங்கள் அவரிடத்தில் அதிக அன்பு கொண்டார்கள். விக்டோரியா மஹா ராணியார் 1901-ம் வருடத்தில் உயிர் துறந்தார்.

விக்டோரியா மஹாராணிக்குப் பிறகு அவருடைய

ஏழாம் எட்வர்டுமன்னர்

பிள்ளையான ஏழாவது எட்வர்டு என்பவர் நமக்கு சக்கரவர்த்தி யானார். அவர் மற்ற தேசத்து அரசர்களுடன் அதிக நட்புக் கொண்டிருந்தார். அவர் விக்டோரியா அரசியைப்போல ஜனங்களிடத்தில் அதிக கருணை வாய்ந்தவர். இவர் 1910-ம் வருடத்தில் உயிர் துறந்தார்.

வினாக்கள்

1. சிப்பாய்க் கலகம் ஏற்படக் காரணம் என்ன ? இதை செய்யும்படி தூண்டியவர் யார் ?

2. சிப்பாய்க் கலகத்தின்போது இங்கிலாந்தில் யார் ஆண்டுவந்தனர் ? கலகத்திற்குப் பிறகு இந்தியா எவருடைய ஆளுகைக்கு விடப்பட்டது ? முதலாவது இராஜப்பிரதிநிதியின் பெயர் என்ன ?

———

27. ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியும் மஹா ஐரோப்பிய யுத்தமும்

ஏழாவது எட்வர்டு மன்னருக்குப் பிறகு ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பட்டத்திற்கு வந்தார். அவர் 1911-ம் வருடம் டிசம்பர் மாதம் 12-ம் தேதியன்று டில்லியில் இந்தியாவின் சக்கரவர்த்தியாக முடி சூட்டிக் கொண்டார். அச்சமயம் பல பிரபுக்களும் சுதேச மன்னர்களும் அங்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது தான் டில்லி நகரம் நமக்குத் தலைநகரமாயிற்று.



ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்

எட்டாவது எட்வர்டு மன்னர்

ஜார்ஜ் மன்னரின் ஆட்சியின் காலத்தில் ஐரோப்பாவில் ஒரு பெரிய யுத்தம் ஏற்பட்டது. அந்த யுத்தத்தில் ஆங்கிலேயர்கள் ஜெர்மானியருக்கு விரோதமாக இருந்து சண்டை செய்தார்கள். அந்தச் சமயத்தில்

இந்தியர்கள் ஆங்கிலேயருக்குப் பலவிதமான உதவிகள் செய்தார்கள். ஐரோப்பிய மஹா யுத்தம் 1914-ம் வருடம் முதல் 1919-ம் வருஷம் வரையில் நடந்தது. அந்த யுத்தத்தில் ஆங்கிலேயர்கள் வெற்றி யடைந்தார்கள்.

ஜார்ஜ் மன்னர் நம்மை சற்றேறக் குறைய 25 வருஷங்கள் வரையில் ஆண்டு வந்தார். அவர் ஜனங்களிடத்தில் அதிக அன்பு உடையவர். அவர் நாட்டை மிகவும் சிறப்பாக ஆண்டு விட்டு 1936-ம் வருடம் ஜனவரி மாதத்தில் உயிர் துறந்தார். அவருக்குப் பிறகு அவர் மூத்த குமாரராகிய எட்டாவது எட்வர்டு என்பவர் நமக்குச் சக்கிரவர்த்தியாக ஒரு வருஷம் அரசாண்டு தனது பதவியிலிருந்து விலகிக் கொண்டார். இப்போது அவரது இளைய சகோதரர் ஆரும் ஜார்ஜ் மன்னர் ஆண்டு வருகிறார்.

வினாக்கள்

1. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் எப்போது பட்டத்துக்கு வந்தார்? அவர் ஆட்சியில் என்ன ஏற்பட்டது? அவர் எத்தனை வருஷ காலம் ஆண்டுவந்தார்?

2. டெல்லி எப்போது நமக்குத் தலைநகராயிற்று?

3. ஜார்ஜ் மன்னருக்குப்பிறகு பட்டத்துக்கு வந்தவர் யார்? அவருடைய முடிவு என்ன?

28. நமது இறைவர்

பிள்ளைகளே! நம்மை இப்பொழுது ஆளும் ஆறும் ஜார்ஜ் மகிபர் என்பவர் ஐந்தாவது ஜார்ஜ் மன்னரின் இரண்டாவ்து புதல்வர். அவர் நம் நாட்டின் ஜனங்களிடம் அதிக விசுவாசமுடையவர். இவர் நமக்குப் பல சௌகர்யங்கள் செய்யவேண்டு மென்ற எண்ணத்தை உடையவராக இருக்கின்றார்.



இவர் தம்முடைய தகப்பனாரைப்போலவே எல்லா ஜனங்களிடத்திலும் அதிக விசுவாசமுடையவர். நமது ஆறும் ஜார்ஜ் மன்னர் தீர்க்க ஆயுளுடனும் அதிக கீர்த்தியுடனும் நம்மைப் பல காலம் வரையில் ஆண்டுவரும்படி கடவுள் கிருபை செய்வாராக! நமது ஆறும் ஜார்ஜ் மன்னர் நீடுழி வாழ்க. இவர் 14-12-'1895-ல் பிறந்து 12-5-1937-ல் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். இவர் பட்டத்துக்கு வருவதற்குமுன் டியூக் ஆப் யார்க் என்று பெயர்.

வினுக்கள்

1. நமது மன்னர் எப்போது முடி சூட்டிக்கொண்டார்? இவர் பட்டத்துக்கு வருவதற்கு முன் பெயர் என்ன? இவர் எந்த வருஷம் பிறந்தார்?

---

29 நமது அரசாங்க முறை.

நம் தேசத்தை ஆளும் இராஜப்பிரதிநிதியை வைசிராய் என்று சொல்லுகிறோம். நமக்கு இப்பொழுது

இராஜப் பிரதிநிதியாய் இருப்பவர் லின்லித்கொ பிரபு என்பவர். இவர் விவசாயிகளிடத்தில் அதிக அன்பு உடையவர். இவருக்கு உதவியாக ஏழு அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு நிர்வாக சபை இருக்கின்றன. இனிவரப்போகும் சீர்திருத்தப்படி இந்த ஏழு அங்கத்தினர்களும் ஜனங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த மந்திரிகளாக இருப்பார்கள்.

நிர்வாக சபையைத் தவிர இராஜப் பிரதிநிதிக்கு ஆலோசனை சொல்ல இரண்டு சபைகள் இருக்கின்றன. அவைகளுக்கு முறையே டில்லி சட்ட சபை, ராஜாங்க சபை என்று பெயர். இந்தச் சபைகளின் அங்கத்தினர்கள் பெரும் பான்மையோர் ஜனங்களால் தேர்ந்தெடுக்

கப் பட்டவர்கள். இனி வரப்போகும் சீர்திருத்தப்படி (Federation) சமஷ்டி ஏற்பாட்டில் இந்த சபையில் சுதேச மன்னர்களின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். புதிய சீர்த்திருத்தப்படி சட்ட சபைகளில் ஜனங்களு டைய பிரதிநிதிகள்தான் அதிகமாக இருப்பார்கள்.

மாகாணங்களை ஆளுவதற்காக ஒவ்வொரு மாகா ணத்திலும் ஒரு கவர்னர் இருக்கிறார். அவருக்கு உதவி புரிய பொறுப்பு வாய்ந்த மந்திரிகளிருக்கிறார்கள். இவர் கள் மாகாணத்திலுள்ள இரு சட்ட சபைளுக்கும் கட் டுப்பட்டு அரசாட்சி செய்து வருபவர்கள். இப்புதிய சீர்த்திருத்தப்படி அந்தச் சபைகளுக்கு பிரதிநிதிகளை அனுப்பும் உரிமை பெரும்பாலான ஜனங்களுக்கே உண்டு.

பிள்ளைகளே! உங்களுக்கும் நாளடைவில் அந்த உரிமை வரும். அந்த உரிமையை நீங்கள் சரியானபடி பிரயோஜனப் படுத்தி நம் தேசத்தின் முன்னேற்றத் தைத் தேடவேண்டும்.

நம் சுற்றுப் பக்கங்களிலுள்ள பட்டணங்கள், கிரா மங்கள், ஜில்லாக்கள் முதலியவைகளில் உள்ள ஜனங் களின் வாழ்க்கைக்கு அவசியமானதை கவனிக்கப் பல ஸ்தல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகளைப் பரிபாலிக்க ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகள் இருக்கின்றன. நாம் அந்த சபைகளுக்குப் பொறுப்பு வாய்ந்தவர்களை அனுப்பி நம்முடைய சௌகர்யங்களை அதிகப் படுத்திக்கொள்ள முயல வேண்டும்.

இச் சீர்திருத்தங்களின் படி ஜனங்களுக்கு ஏற்படும் உரிமைகளை நாம் சரிவர பிரயோஜனப் படுத்தி நம் நாட்டின் முன்னேற்றத்தை அடைய நாம் முயல வேண்டும்.

வினுக்கள்

1. இப்போது இந்தியாவில் இராஜப்பிரதிநிதியாகியிருப்பவர் யார்? இவருக்கு உதவியாக என்ன இருக்கிறது?

2. சட்டசபை பிரிதிநிதிகளை தேர்ந்தெடுப்பவர் யார்? ஜனங்களின் பொது நன்மைகளை கவனித்துவர நமக்கு என்ன சாதனங்கள் இருக்கின்றன?

30. நமது தேசத்தின் முன்னேற்றம்

பிள்ளைகளே! நம்முடைய தேச முன்னேற்ற விஷயத்தில் நாம் ஈடுபட வேண்டும். நம் நாடு முன் காலத்தில் அதிக கீர்த்தி வாய்ந்த நாடாக இருந்ததை நாம் படித்தோம். அவ்வாறு நம் நாடு மறுபடியும் அதிக கீர்த்தி அடையும் என்பதில் சந்தேகமில்லை.

நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பல பெரியார்கள் உழைத்து வந்திருக்கின்றார்கள். அவர்களில் அதிக கீர்த்தி வாய்ந்தவர் ராஜா ராம் மோஹன் ராய் என்பவர். அவர் வங்காளத்தில் பிறந்தவர். சிறு வய

திலேயே பல சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டார். அவர் நமது சமூகக் கொள்கைகளைச் சீர்திருத்துவதற்காக அதிக பிரயாசை எடுத்துக் கொண்டார். அவர் சதி என்ற கொடிய வழக்கத்தை அகற்றப் பல முயற்சிகள் செய்தார். அவர் இந்த விஷயத்தை அரசாங்கத்தாருக்கு எடுத்துக் காட்டி அவர்களுடைய மனோபாவத்தை மாற்ற இங்கிலாந்திற்குச்சென்றார். ராஜா ராம் மோஹன் ராய் என்பவரின் முயற்சியால் இந்தக் கொடிய வழக்கம் அரசாங்கத்தாரால் நிறுத்தப்பட்டது.

இவர் மஹாத்மா மோஹன்தாஸ் கரம்சந்து காந்தி யாவர். இவர் கத்தியவாரிலுள்ள போர்பந்தர் என்ற ஊரில் 1869-ம் ஆண்டில் பிறந்தவர். பாரிஸ்டர் வேலைக்கு தேற்சி பெற்றார். இவர் 1893-ம் ஆண்டு முதல் 1914-ம் ஆண்டு வரை தென் ஆபிரிக்காவில் இந்தியரின் நன்மைக்காகப் பாடுபட்டு 1915-ல் இந்தியா வுக்கு வந்தார்.

1. துன்பத்தை தைரியமாய் சகிக்கவும்,
2. பொறுமையை விட்டுவிடவும்,
3, சுயவெறுப்புடன் பொது நன்மைக்காக உழைக்கவும் ஜனங்களுக்கு இவர் கற்பித்து வருகிறார்.

இவர் காலத்தில்தான் இந்தியன் நாஷனல் காங்கி ரஸ் சிறப்புற்று விளங்கலாயிற்று. இப்பெரியாரின் அஹிம்சா தர்மத்தையும், குணதிசயத்தையும் போற்று தார் உலகில் இல்லை. இப்போது நமக்கு ஆங்கிலேய அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கும் சிறிது அர

சியல் சுதந்திரமும் சீர்திருத்தமும் உலக மகாயுத்தத்தின்போது அவர்களுக்கு நாம் செய்த உதவியின் பிரதி பலனாக இருப்பினும், இவரது அரசியல் கிளர்ச்சியினாலும் விடா முயற்சியினாலும் கிடைத்ததுடன், மேலும் சுதந்திரம் பெற முயன்றுவருகிறார் என சொல்வது மிகையாகாது. இவர் இந்தியாவில் தீண்டாமையை ஒழிக்க அரும்பாடு பட்டுவருகிறார். இப்பெரியார் தீர்க்க

மஹாத்மா காந்தி

ஆயுளுடன் இருந்து தேச முன்னேற்றத்திற்கு பாடு படும்படிச் செய்ய திட சரீரத்தை அளிக்குமாறு இறைவனைப் பிரார்த்தித்து வருவோம்.

இப்பொழுது இவரைப் போன்ற பல பெரியார்கள் நம் நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடு பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இப் பெரியோர்களுக்கு நம் மால் ஆகக் கூடிய உதவியைக் கொடுக்க கடமைப் பட்டிருக்கின்றோம்.

நம் நாட்டில் அநேக சுதேச மன்னர்கள் இருக் கின்றார்கள். அவர்களில் அநேகர் தங்களுடைய ஜனங் களின் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகிறார்கள்.

அவ்வாறாக உழைத்து வரும் மன்னர்களில் மைசூர், திருவனந்தபுரம், கொச்சி, ஹைதராபாத்,

கிருஷ்ணராஜ உடையார்

ராமவர்மா சித்திரை திருநாள்

பரோடா முதலிய இராஜ்யங்களை ஆண்டு வரும் மன் னர்கள் அதிக கீர்த்தி வாய்ந்தவர்கள். இப்பொழுது மைசூரில் ஆண்டு வரும் மன்னருக்கு கிருஷ்ண ராஜ உடையார் என்று பெயர். இவர் தம் இராஜ்யத்தின்

சிறப்பை அதிகப்படுத்தி இருக்கிருர். திருவனந்த



புரத்தை ஆண்டு வரும் மன்னர் இளமை வயது

வாய்ந்தவராக இருந்த போதிலும் தம் இராஜ்யத்தின் சிறப்பை அதிகப்படுத்த முயன்று வருகிறார். இந்த இராஜ்ஜியத்தில் தீண்டாமையை ஒழித்த புகழ் இம்மன்னருடையதாகும். பரோடா இராஜ்யத்தை ஆண்டுவரும் மன்னர் அதிக கீர்த்தி வாய்ந்தவர். இவர் தம் இராஜ்யத்தைப் பல வழிகளில் கீர்த்தி வாய்ந்ததாக செய்திருக்கிறார். இவர் இராஜ்யத்தில் இருந்து வரும் குடிகள் அதிக முன்னனேற்றம் அடைந்திருக்கிறார்கள். ஹைதராபாத் என்ற இராஜ்யத்தை ஆண்டு வரும் நிஜாம் மன்னர் பல தர்மங்களைச் செய்து தன்னுடைய குடிகளுக்குப் பல சௌகர்யங்களைச் செய்ய முயன்று வருகிறார்.

இவ்வாறாக நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் பெரியார்களுக்கு நாம் நம் வந்தனத்தைச் செலுத்தி அவர்களை நம்மால் கூடிய மட்டும் பின்பற்றி நடக்க முயலவேண்டும்.

வினாக்கள்

1. தேச முன்னேற்றத்திற்காக பாடுபடுபவர்களில் முக்கியமானவர் யார்? இவர் காலத்தில் இந்தியா தென் ஆபிரிக்க நாடுகள் அடைந்த நன்மையைக் கூறுக?

2. சதி என்ற கொடிய வழக்கத்தை அகற்றியது யார்? எவ்விதம் சதியை நிறுத்தினார்? அவர் எந்த நாட்டில் பிறந்தவர்?

3. இந்தியாவிலுள்ள சுதேச இராஜ்யங்கள் எவை? இவைகளில் தீண்டாமையை ஒழித்த அரசர் எவர் கூறுக?

THE B. N. PRESS, MADRAS.